# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT

# 2021



## දේශීය වෛද්‍ය විද්‍යා ආයතනය

## කොළඹ විශ්වවිද්‍යාලය

### உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம்

### கொழும்பு பல்கலைக்கழகம்

## INSTITUTE OF INDIGENOUS MEDICINE

## UNIVERSITY OF COLOMBO

# தொலைநோக்கு

ஆயுர்வேத, யூனானி மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகள் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் மிகச் சிறந்த நிறுவனமாக ஆகுதல்.

# செயற்பணி

இலங்கையில் பாரம்பரிய மருத்துவ முறைகளின் முன்னேற்றத்திற்கு அவசியமான அறிவைப் பரப்புவதற்கான கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**பணிப்பாளரின் மதிப்புரை**

2021-ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது அடைவுகள் பற்றி அறிக்கையிட இது வாய்ப்பாக அமைந்ததையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன். 2021-ஆம் ஆண்டின்



போது கோவிட்-19 தொற்றுநோய் முடிவுக்கு வராத போதிலும், சுகாதார பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க, கல்விசார் மற்றும் நிருவாக செயற்பாடுகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டன. எனினும், சகல விரிவுரைகளும் சில பரீட்சைகளும் ஒன்லைன் முறை ஊடாக நடத்தப்பட்டதுடன், சிகிச்சையக பாடங்களை செய்ததைப் போல அவர்கள் நேரடியாக வருகைதந்து பங்குபற்றுவதன் மூலமாக இறுதியாண்டு பரீட்சை நடாத்தப்பட்டது.

கோவிட் – 19 சூழ்நிலைமையுடன், செயல்பாட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில இலக்கு கருத்திட்டங்களை எம்மால் அடைந்துகொள்ள முடிந்தது. கொழும்பு பல்கலைக்கழக தரத்திற்கு ஏற்றவாறு நிறுவகத்தை பீடமொன்றாக மாற்றுதல் மிக முக்கியமான செயற்றிட்டமொன்றானது என்பதுடன், அது உபவேந்தர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் பெருமளவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. பேராசியர் அலகு, மருத்துவக் கல்வி அலகு மற்றும் போதனா வைத்தியசாலை ஆகியவற்றை தாபிக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. தற்போதுள்ள விரிவுரை மண்டபங்களை முழுமையான வசதிகளுடன் மேம்படுத்துதல் மற்றும் 3 மாடிக் கட்டடத்தை (கட்டம் I) நடைமுறைப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பார்வையாளர்கூடத்துடனான விளையாட்டு மைதானம் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பன மேம்படுத்துதல் செய்யப்பட்டுள்ளன. மேலும், பணியாளர் உறுப்பினர்களுக்கு MIS முறைமையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இறுதியாக, நிறுவகத்தினுள் பகிடிவதை (ரெங்கிங்) இல்லாத சூழலைப் பேணுவதற்கு அனைத்து முன்னேற்பாடுகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது முகாமைத்துவ சபை, கல்விசார், நிருவாக, கல்விசாரா பணியாட்தொகுதி உறுப்பினர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் ஆகியோர்களது அர்ப்பணிப்புமிக்க ஆதரவுடன், உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகம் (IM) 2022-ஆம் ஆண்டினுள் எதிர்வரவுள்ள சாவல்களுக்கும் அடைவுகளுக்கும் தயாராக இருக்கிறது.

**சிரேஷ்ட பேராசிரியர் பிரியானி ஏ. பரணகம**
**பணிப்பாளர் / IIM**

**ஒரே பார்வையில் செயல்திறன்**



## உள்ளடக்கம்

உடனடி பார்வைக்கு ....................................................ix

01. நிறுவகத்தின் அதிகாரம்....................................................10

1.0 உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் சார் அறிமுகம் (IIM) ....................................................10

1.0.1. ஆயுர்வேத கற்கை சார் திணைக்களம் ....................................................12

1.0.2. யூனானி கற்கை சார் திணைக்களம்....................................................14

1.0.3 நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு....................................................16

1.1 கட்டளைச்சட்டம்....................................................17

1.2 முகாமைத்துவ சபை ....................................................17

1.3 நிறுவகத்தின் பணிப்பாளர்....................................................18

1.4 கல்விசார் குழுக்கள்....................................................20

1.4 .1 ஆயுர்வேத திணைக்களம் சார் குழு ....................................................20

1.4.2 யூனானி திணைக்களம் சார் குழு....................................................21

02. கற்கைசார் திணைக்களங்கள், அலகுகள் மற்றும் நிலையங்கள் ....................................................21

2.1 ஆயுர்வேதம் சார் கற்கைத் திணைக்களத்தின் கீழுள்ள அலகுகள் ....................................................21

2.2 யூனானி கற்கை சார் திணைக்களத்தின் கீழுள்ள அலகுகள் ....................................................22

2.3 தகவல் தொழில்நுட்ப (IT) அலகு....................................................22

2.4 நூலகம் ....................................................23

2.5. ஆங்கில மொழி கற்பித்தல்....................................................23

2.6 நிருவாகப் பிரிவுகள் மற்றும் தலைவர்கள் ....................................................24

03. உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் பற்றிய ஓர் கண்ணோட்டம்........24

3.1 கூட்டங்கள் மற்றும் குழுக்கள்........24

3.2 நியமனங்கள் மற்றும் பணியாளர்கள் பற்றிய தகவல்கள்........25

3.2.1 ஊழியர்கள் வகைப்படுத்தல்........25

3.2.2 மொத்த புதிய நியமனங்கள்........26

3.2.3. பதவியணி விபரம்........26

3.2.4 பணியாளர் அங்கத்தவர்கள் எண்ணிக்கை........26

3.2.5 பணியாளர் சார் மாற்றங்கள்........27

3.2.6. நிருவாக பணியாளர்கள் பற்றிய விபரம்........27

3.2.7 நிறுவகத்தின் கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரம்........28

3.2.8 கல்விசாரா பணியாளர்கள் பற்றிய விபரம்........28

3.3 கல்வி சாரா பணியாளர்களுக்கான திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்........30

3.4. விசேட செயற்பாடுகள்........30

3.4.1. 7-வது சர்வதேச மாநாடு........30

3.4.2 முதலுதவி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்........31

3.4.3. திசைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம்........31

3.4.4. கோவிட்-19 பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்........32

3.4.5. பாராட்டுதல் வைபவம்........32

3.4.6. யூனானி தின சர்வதேச வெபினர்........33

3.5 ஆய்வு, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் பிரசுரங்கள்33

3.6 கல்விசார் பணியாளர்கள் பங்குபற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ........ 34
3.7 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்விசார் பணியாளர்களின் பங்களிப்புக்கள் ........ 34
3.7.1 ஆயுர்வேத சார் கல்வித் திணைக்களம் ........ 34
3.7.2 யூனானி சார் கல்வித் திணைக்களம் ........ 40
3.8 புனரமைப்புக்கள் மற்றும் நிர்மானித்தல்கள் ........ 43
04. மாணவர் பற்றிய விபரம் ........ 43
4.1 BAMS மற்றும் BUMS இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம் ........ 43
4.2 ஆயுர்வேத போதனா வைத்தியசாலை ........ 44
4.3 கடந்த 6 வருடங்களுக்கான பட்டதாரிகள் உருவாக்கல் 44
4.4 பட்டதாரி மாணவர் சேர்த்துக்கொள்ளல் ........ 45
4.5 மாணவர் நலனோம்புகை ........ 46
4.5.1 நிதி உதவிகள் ........ 46
4.5.2 மாணவ, மாணவிகளுக்கான விடுதிகள் ........ 48
4.6. நிறுவகத்தின் மாணவர் சங்கங்கள் ........ 49
4.6.1. உண்ணாட்டு மருத்துவ மாணவர்கள் குழு ........ 49
4.6.2. ரொடரெக்ட் கழகம் (The Rotaract Club) ........ 49
4.7 பரிசில்கள் மற்றும் பதக்கங்கள் - 2021 ........ 50
05. நிதி மற்றும் கணக்கீடுகள் பற்றிய விபரம் ........ 51
5.1 நிதிசார் கண்ணோட்டம் ........ 51
5.1.1 மீண்டெழும் செலவினங்கள் பற்றிய விபரம் ........ 51
5.1.2 மூலதன செலவினங்கள் பற்றிய விபரம் ........ 51

5.1.3 நிதிசார் செயலாற்றல் பற்றிய தகவல்கள் (செலவினங்கள்)........................................................................52

5.1.4 நிதிசார் செயலாற்றல் பற்றிய தகவல்கள் (உருவாக்கப்பட்ட வருமானம்)....................................................52

5.1.5 ஒரு மாணவருக்கான கிரயம்...............................................52

06. தர உத்தரவாத குழுவின் (QA Cells) செயலாற்றல்....................53

07. IIM நிறுவகத்தின் இலக்குகளும் குறிக்கோள்களும்..........53

08. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்துகொள்ளல்.........................................................................................55

09. நிதிக் கூற்றுக்கள் ..........................................................................62

10. கணக்காய்வு அறிக்கையும் பதில்களும் ..................................97

**உடனடி பார்வைக்கு**

| | |
|---|---|
| *பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* | *உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம், இராஜகிரிய, இலங்கை* |
| | |
| ***தொலைபேசி இலக்கங்கள்*** | |
| *பொது* | +112692385/+112694308 |
| *பணிப்பாளர்* | +112861399 |
| *பிரதி பதிவாளர்* | +112697772 |
| *பிரதி நிதியாளர்* | +112689153 |
| | |
| ***பெக்ஸ் இலக்கங்கள்*** | |
| | |
| *பணிப்பாளர்* | +112697175 |
| *IIM* | +112889739 |
| ***மின்னஞ்சல்*** | |
| *பணிப்பாளர்* | director@iim.cmb.ac.lk |
| *பிரதி பதிவாளர்* | dr@iim.cmb.ac.lk |
| *பிரதி நிதியாளர்* | accounts@iim.cmb.ac.lk |

## 01. நிறுவகத்தின் அதிகாரம்

### 1.0 உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் சார் அறிமுகம் (IIM)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிரித்தானிய காலனித்துவ நாடாக காணப்பட்ட அப்போது சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கையில் சுதேச மருத்துவ முறையொன்று காணப்பட்டது. ஆனால் சுதேச மருத்துவ கல்வியை வழங்குவதற்கு எந்தவொறு கல்லூரியும் இருக்கவில்லை. 3 சங்கங்கள் அல்லது அமைப்புகள் உருவாக்கப்பட்டன. பாரம்பரிய மருத்துவ அறிவை பாதுகாப்பதற்கும், கீழைத்தேய மருத்துவ முறையில் ஈடுப்பட்டவர்களது தொழில்வாண்மை ரீதியான அந்தஸ்தினை பாதுகாப்பதற்கும் அவற்றை பேணுவதற்குமான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை இவை மேற்கொண்டன. இந்த அமைப்புகளாவன “சிங்கள மருத்துவ சங்கம் (1891), ஸ்ரீலங்கா வைத்திய மகா மண்டலய (1901), ஸ்ரீலங்கா சமாஜ பிரதிசன்ஸ்கரன சங்கமய (1915). சேர் சொலமன் ஆர். டயஸ் பண்டாரநாயக்க, எப்.ஆர். சேனாநாயக்க, கே. பாலசிங்கம், டொனால்ட் உபயசேக்கர, ஆனந்த குமாரசுவாமி போன்ற சிறந்த ஆளுமைகளும் சிறந்த தேசப்பற்றாளர்களும் இந் நோக்கத்திற்காக நிதியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

1926-ஆம் ஆண்டு முதல் முறையாக சுதேச மருத்துவ முறை தொடர்பில் அக்கறை செலுத்திவந்த குழுவொன்று இந்த மருத்துவ முறையை பின்பற்ற முனைப்புடையவர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் முகமாக போதனா வைத்தியசாலைக்கு அருகில் கல்லூரி ஒன்று தாபிக்கப்பட வேண்டுமென பிரேரித்தது. அப்போதைய சட்டநிர்ணய சபையானது (ராஜ்ய மந்திரன சபாவ) ‘ஆயுர்வேத சம்மேளன சபா’ என்ற தலைப்பில் ஆலோசணை சபையொன்றை 1928 இல் தாபித்தது. அதன் தவிசாளராக டாக்டர். கே. பாலசிங்கம் பணியாற்றினார். இந்த குழுவின் விதப்புரைகளை அடிப்படையாக கொண்டு 1929 யூன் 10 ஆம் திகதி “சுவதேசிய வைத்திய வித்தியாலய” (சுதேச மருத்துவ கல்லூரி) தாபிக்கப்பட்டது. அப்போதைய இலங்கை ஆளுநரான சேர் ஹபட் ஜெம்ஸ் ஸ்டென்லி அவர்களால் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது பொரல்ல கொட்டா வீதியிலுள்ள பவர் கட்டடத்தில் தாபிக்கப்பட்டது. மேற்கத்திய மருத்துவ தகைமை படைத்தவரும் ஆயுர்வேத அறிவியல்கள் பயிற்சி தொடர்பில் காத்திரமான அறிவை கொண்டவருமான இந்தியாவை சேர்ந்த டாக்டர் ஏ.என்.என். பனிக்கர் அவர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு அதேவேளையிலே இலங்கையில் யூனானி மருத்துவ முறையை விருத்தி செய்யும் முகமாக டாக்டர் எச்.எம். ஜபர் மற்றும் டாக்டர். எச். அஹமட் ஆகியோரும் இந்தியாவிலிருந்து இங்கு அழைத்துவரப்பட்டனர்.

1941-ஆம் ஆண்டு 17-ஆம் இலக்க சுதேச மருத்துவ கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்டமையானது சுதேச மருத்துவ துறையில் மற்றுமொரு முக்கிய நிகழ்வாகும். அப்போதய சுகாதார அமைச்சரும் சுதேச மருத்துவ ஆலோசனை சபையின்

தவிசாளருமான கௌரவ எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களினால் ஆசிய தராதரத்திற்கு நிகராக கல்லூரியில் கற்பிக்கும் தரத்தை உயர்த்தும் முகமாக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டது. 1961-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 1961-ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டம், 1941-ஆம் ஆண்டின் 17-ஆம் இலக்க சுதேச மருத்துவ கட்டளைச்சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டு, கல்லூரியானது சுதேச மருத்துவ அரசாங்க கல்லூரி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது ஆயுர்வேத கல்லூரி மற்றும் வைத்தியசாலை சபை ஆகியவற்றின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆயுர்வேத சுகாதார பராமரிப்பு முறைகளை மேம்படுத்துவதற்கும் ஆயுர்வேத, யூனானி மற்றும் சித்த தொடர்பான கருவி முறைகளை மேம்படுத்தி பேணுவதற்குமான மேற்கொள்ளபட்ட ஒரு நடவடிக்கை இதுவாகும். ஆயுர்வேத மருத்துவ சபை, ஆயுர்வேத கல்லூரி மற்றும் வைத்தியசாலை சபை, ஆயுர்வேத ஆராய்ச்சி குழு, ஆயுர்வேத மருந்து உருவாக்க குழு ஆகிய நான்கு நியாயாதிக்க சபைகள் உருவாக்கப்பட்டன.

புதிய ஆயுர்வேத சட்டத்தின் கீழ் 1963 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை திப்ளோமா (DIMS) என்ற தகைமை ஆனது ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை திப்ளோமா (DAMS) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1977 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ கல்லூரியானது உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகம் என உள்வாங்கப்பட்டதுடன், 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைகழகத்துடன் இது இணைக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி, 258 ஆம் இலக்கத்தை கொண்ட அரசாங்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் 1977 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க ஆயுர்வேத நிறுவக சட்டத்தின் மூலம் இது மேற்கொள்ளபட்டது. ஆயுர்வேத, யூனானி, சித்த துறையில் தகைமை படைத்த மருத்துவர்களை உருவாக்கும் நோக்குடன் இந்த படிமுறை மேற்கொள்ளபட்டது. 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் 1979 திசம்பர், 21-ஆம் திகதிய 67/14 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் 1979 ஆம் ஆண்டு 7-ஆம் இலக்க சுதேச மருத்துவ நிறுவக கட்டளை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இந்த நிறுவகம் இணைக்கப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழக செனட் சபையின் அனுமதியுடன் இதன் பாடத்திட்டத்தில் பல்வேறு விதமான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அத்தகைய பிரதான சீர்திருத்தங்களில் ஒன்றாக ஆயுர்வேத, சித்த, யூனானி மருத்துவம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களது உதவி பெறப்பட்டது. குறிப்பாக உலக சுகாதார அமைப்பிற்கான ஆயுர்வேத ஆலோசகரான பேராசி. பி.என்.வி. குருப்பு அவர்களிடம் இருந்து நிபுணத்துவம் சார்ந்த ஆலோசனைகள் பெறப்பட்டன. 1977 ஆம் ஆண்டு நிறுவகம் தாபிக்கப்பட்டதன் அடிப்படையில்,

1. ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை பட்டப்படிப்பு (BAMS)
2. யூனானி மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை பட்டப்படிப்பு (BUMS)

ஆகிய இரண்டு பட்டப்படிப்பின் மூலம் கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் வழங்குதல் என்பன நிறுவகத்தின் இரண்டு பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், 1983 ஆம் ஆண்டில் முதலாவது தொகுதி மாணவர்கள் பட்டத்தைப் பெற்றுக்கொண்டனர். ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே பொரல்லை தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை செயன்முறை அறிவு மற்றும் திறன்களை பெற்றுக் கொடுப்பதற்கான வளங்களை வழங்கும் மத்திய நிலையமாக விசேடமாக சிகிச்சையக அமைப்பினுள் செயலாற்றுகிறது. நிறுவகமானது கற்பித்தலில் பொறுப்பான பட்டமேற்படிப்பு பட்டத் தகைமைகளைக் கொண்ட கல்விசார் பணியாளர் தொகுதியினரைக் கொண்டிருப்பதுடன், கடந்த ஐந்து வருட கல்வியாண்டின் போது மாறுபட்ட 23 பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற சுதேச மருத்துவ பட்டதாரிகளை உருவாக்கும் முகமாக பாடத்திட்டமானது ஆயுர்வேத, யூனானி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய விஞ்ஞான கற்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியிலும் வருடாந்த பரிட்சைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பரிட்சையும் எழுத்து மூலமான வினாத்தாள், வாய்மொழி மூலமான பரிட்சை மற்றும் செயல்முறை அல்லது சிகிச்சை சார்ந்த அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

**உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தில் (IIM) இரண்டு கற்கைத் திணைக்களங்கள் காணப்படுகின்றன.**

### 1.0.1. ஆயுர்வேத கற்கை சார் திணைக்களம்

இலங்கையின் ஆயுர்வேத மருத்துவம் தொடர்பான ஆரம்பகால குறிப்புகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த இலங்கை அரசனான, அதேவேளை சிறந்த மருத்துவனான இராவனனுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. வரலாற்று ரீதியாக நோக்குகையில் இராமயனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இராவனனின் நற்பெயர் பற்றி ஆயுர்வேத மருத்துவத்தில் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியின் இந்தியாவில் இமையமலை அடிவாரத்தில் நடைபெற்ற மருத்துவ கருத்தரங்கொன்றில் இலங்கையை இராவனன் பிரதிநிதித்துவம் செய்ததாக இராமாயணம் குறிப்பிடுகிறது. நான்கு வகையான பழங்குடியினர் வாழ்ந்தனர் அவையாவன யக்ஸ , ரக்ஸ, நாக மற்றும் இலங்கையை சேர்ந்த வேடர்கள். வரலாற்று ஆதார ஆய்வு அறிவுத்துறையின் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவம் தொடர்பான பின்வரும் புத்தகங்களை இலங்கை அரசனான இராவனன் எழுதியதாக குறிப்பிடப்படுகின்றது. அவையாவன அரகபிகாசய, நதிவிக்னானய, குமாரதந்தரய மற்றும் உதிசன்தரய.

இலங்கையில் வளமான மருத்துவ தாவரங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சில இலங்கைக்கு உரியதாகும். இந்தியாவில் பயன்படுத்தப்படுகின்ற பெரும்பாலான தாவரங்கள் இங்கும் பயன்படுத்தப்படுகின்றன. தொழுகந்த மற்றும் ருமசல்லா போன்ற தாவரங்களின் பகுதிகள் இந்தியாவின் இமைய மலையிலிருந்து வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அரசன் இராமனின் குரங்கான அனுமானினால் அரசம் இலங்கைக்கு கொடுவரப்பட்டதாக கருதப்படுகின்றது. அனுராதபுரம், பொலனறுவை, மெதிரிகிரிய மற்றும் பொம்பரிப்பு ஆகிய பிரதேசங்களில் காணப்பட்ட ஆதிகால மருத்துவ நடைமுறைகள் பற்றிய சான்றுகள் வரலாற்றுக்கு முற்பட்ட புதைகுழிகளில் இருந்து தோன்றி எடுக்கப்பட்டன.

மிஹின்தலை, மெதிரிகிரிய மற்றும் பொலனறுவையில் அலகான ஆகிய ஆதிகால மன்னர்களினால் தாபிக்கப்பட்ட ஆதிகால வைத்தியசாலைகளின் கட்டமைப்பு எச்சங்கள் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. கல்வெட்டுகள் மற்றும் மருந்துகள் மற்றும் ஏனைய உபகரணங்களை கண்டுபிடித்தல் ஆகியவற்றின் மூலமாக அத்தகைய வைத்தியசாலைகளின் அடையாளம் தாபிக்கப்பட்டது. மகாவம்சம், சோளவம்சம் ஆகியவற்றின் பிரகாரம் ஆரம்பகால பல அரசர்கள் இலங்கையில் ஆயுர்வேத மருத்துவத்தை விருத்தி செய்வதற்கான அர்பணிப்பாக பல சேவைகளை வழங்கியுள்ளனர். அத்தகைய நடைமுறைகளுக்கான உதாரணங்களாக பண்டுகாபய மன்னன் (கி.மு. 4 ஆம் நூற்றாண்டு), சேன மன்னன் (கி.பி 851-885), புத்ததாச மன்னன் (கி.பி.362-409), தாதுசேன மன்னன் (கி.பி.460-478) ஆகியோரைக் குறிப்பிடலாம். அத்தகைய ஆயுர்வேத சார்ந்த வரலாற்று சான்றுகளின் பிரகாரம் சுதேச மருத்துவம் தொடர்பில் மகத்தான வரலாறு ஒன்றை இலங்கை பெற்றுள்ளதை அவதானிக்ககூடியதாக உள்ளது. இருப்பினும் வெளிநாட்டு படையெடுப்பின் காரணமாக 16 ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் பல பின்னடைவுகளை எதிர்க்கொண்டது. அதன் பின்னர் சுயமாக சுயாதின நடவடிக்கைகள் மூலம் ஆயுர்வேத விருத்தியடைந்தது. வருடாந்தம் மரபு ரீதியான செயன்முறை ஒன்றாக இது பின்பற்றப்படுகின்றது. (இது பெற்றோரிடம் இருந்து பிள்ளைகள் கற்றுக்கொள்ளுதல்) உதாரணம்: எஸ் வெதகம (கண் மருத்துவம்), கெடி வான (கட்டிகள் மற்றும் நச்சுசீக்கட்டு ஆகியவற்றுக்கு சிகிச்சை அளித்தல்), சர்பவிச (நச்சியல்) பிஸ்சுபலு (விசர்நாய்க்கடி நோய்) விதும் பிலிசும் (எரிகாயம்), கெடும் பிதும் (எலும்பு முறிவு மற்றும் உடற்பாகம் விலகுதல்)

தற்சமயம் சுமார் 16,800 பதியப்பட்ட ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் காணப்படுகின்றனர். இவர்களுள் சுமார் 5000 இற்கு மேற்பட்டவர்கள் கல்வி ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் தகைமை பெற்று எமது தேசத்திற்கும் நாட்டிற்கும் சேவையாற்றிவருகின்றனர்.

### 1.0.2. யூனானி கற்கை சார் திணைக்களம்

பெரிசல்ஸ் காலத்துடன் (கி.மு 562-430) யூனானி மருத்துவத்தின் வரலாறு ஆரம்பமாகின்றது. அரேபிய நாகரிகத்தின் போது இது வளர்ச்சியடைந்தது. இதனை அரேபிய மருத்துவம் எனவும் அழைக்கின்றனர். மத்திய காலப்பகுதியில் கடற்பயணிகளாக காணப்பட்ட அரேபியர்கள் குறிப்பாக இந்தியாவுடன் வர்த்தக ரீதியாக உறவுகளை பேணி வந்தனர். இருப்பினும் பின்னர் இலங்கையுடன் நேரடியான வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். இதன் காரணமாக பலர் இலங்கையில் குடியேறினர். குறிப்பாக கரையோரப்பகுதியில் குடியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையை சேர்ந்த முஸ்லிம்கள் இந்த முறையை பாதுகாத்து அதனை பரப்பி வந்தனர். 21 ஆம் நூற்றாண்டிலும் கூட இதனை மேற்கொண்டு வருகின்றனர். இதில் 'போரா' இனத்தை சேர்ந்தவர்கள் (கி.மு 460-360) ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இன்றும் கூட "மருத்துவத்தின் தந்தை" ஆக கருதப்படுகின்றனர். கேளிக்கை கோட்பாட்டிலே இவரே சிறந்து விளங்கியவர். யூனானி மருத்துவத்தின் அடுத்த சிறந்த பிரமுகராக சிறந்த தத்துவ ஞானியாக அரிஸ்டோட்டல் (கி.மு 384-322) திகழ்ந்தார். அரேபியர்களுக்கு உடற்கூறியல் பற்றிய அறிவை ஜெலிநோஸ் (கெலன் கி.மு 131-210) அறிமுகம் செய்தார்.

அன்று முதல் யூனானி மருத்துவத்தின் வளர்ச்சிற்கும் விருத்திற்கும் பலர் தமது காத்திரமான பங்களிப்புகளை வழங்கினார்கள். யூனானி மருத்துவ முறையில் மிகவும் புகழ் பெற்ற வைத்தியராகவும் அதேவேளை தத்துவஞானியாகவும் காணப்பட்டவர் இபின் சினா (அபிசினியா 937-1037) மருத்துவம் தொடர்பிலான இவரது பங்களிப்புகளில் "கெனோன் ஒப் மெடிசின்" என்ற கலைக்களஞ்சியம் மருத்துவம் பற்றிய சிறந்த புத்தகமாகும். முதலாம் நூற்றாண்டில் அரேபியர்கள் இந்த முறையை இலங்கைக்கு கொண்டு வந்தனர். பின்னர் இதே முறையை முஸ்லிம்கள் விருத்தி செய்தனர். இலங்கையில் காணப்பட்ட மன்னர்களதும் ராஜியங்களதும் சிறந்த குடும்ப மருத்துவ ஆலோசகராக அரேபிய மருத்துவர்கள் காணப்பட்டதாக வரலாறு கூறுகிறது. யூனானி மருத்துவ முறையின் சிறந்த பெருமானம் அதனது நோய் தீர்க்கும் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு இலங்கையின் பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேதத்துடன் அது ஒன்றாக கலந்தது. இலங்கையின் பாரம்பரிய மருத்துவ முறையினுள் இது உள்வாங்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டின் ஆயுர்வேத சட்டத்தின் மூலம் இலங்கையில் காணப்பட்ட சகல விதமான பாரம்பரிய மருத்துவ முறையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட்டன. அதன் பிரகாரம் ஆயுர்வேத என்ற சொல்லானது ஆசிய நாடுகளின் சுதேச மருத்துவமான ஆயுர்வேத, யூனானி, சித்த மற்றும் ஏனைய பாரம்பரிய மருத்துவ முறைகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

தொடர்ச்சியாக இடம் பெற்ற அந்நிய படையெடுப்புகளிகள் காரணமாக அதனால் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாகவும் மன்னர்களின் பலம் தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டது. பல நூற்றாண்டுகளாக மன்னர்களின் அனுசரனையுடன் காணப்பட்ட ஆயுர்வேத மருத்துவமும் வீழ்ச்சி கண்டது. ஏனைய புராதான கலைகள் மற்றும் கைவினை பொருட்கள் ஆகியன இவற்றுடன் வீழ்ச்சி கண்டன. இதேவேளை இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஆயுர்வேத மருத்துவர்களை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆயுர்வேத உள்ளடங்களாக உள்ளூர் கலைகள் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றை சீர் செய்யும் நோக்குடன் சிலோன் சமூக மறுசீரமைப்பு சங்கம் உருவாக்கப்பட்டது. நிதியில்லாமல் முடங்கி கிடந்த ஆயுர்வேத மருத்துவ துறையை மேம்படுத்துவது இந்த அமைப்பின் முக்கிய முன்னுரிமையாக காணப்பட்டது. காலனித்துவ அரசாங்கங்கள் அவசியமான உதவிகளை வழங்காததன் காரணமாக தனது இலக்குகளை மேம்படுத்துவதற்காக தனிநபர்களின் பங்களிப்பில் தங்கியிருக்க வேண்டிய நிற்பந்தம் இதற்கு ஏற்பட்டது. மொத்தமாக 131,000 ரூபா வரை தொடர்ச்சியாக உதவி தொகை வழங்குவதற்கு வாக்குறுதி வழங்கப்பட்டது. கீழைத்தேய மருத்துவம் விஞ்ஞானம் என்ற பெயரின் கீழ் இந்த பணம் வைப்பிலிடப்பட்டது. பரந்த நம்பிக்கையாளர் சபை மூலம் இந் நிதி நிர்வகிக்கப்பட்டது. இதன் தவிசாளராக பால் ஈ. பிரிஸ் காணப்பட்டார் ஆயுர்வேத வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென்ற கருத்தினை 1916 ஆம் ஆண்டில் இதன் நம்பிக்கையார் சபை தெரிவித்தது. ஜி.பி. விக்ரமராச்சி, ஆர் புத்ததாச ஆகியோரை பயிற்சிக்காக கல்கத்தாவிற்கு அனுப்புவதாக நம்பிக்கையாளர் சபை 1917-ல் தெரிவு செய்தது. உண்மையில் ஆயுர்வேத மருத்துவத்தை விருத்தி செய்வது தொடர்பில் அவர்களை தெரிவு செய்தமையானது ஒரு தீர்க்கதரிசனமான விடயமாகும். ஏனெனில் பின்னர் இத் தொழிற்துறை வளர்ந்து வருவதற்கு அவர்களது பங்களிப்பு மிகவும் மகத்தானதாக காணப்பட்டது. 1929-இல் பண்டித் விக்ரமாராச்சி தனது சொந்த பாடசாலையை கம்பஹாவில் தாபித்தார். 1929 வரை நம்பிக்கையாளர் சபை தொடர்ச்சியாக மாணவர்களை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தது. 1929 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ கல்லூரி தாபிக்கப்பட்ட பொழுது டாக்டர். கே பாலசிங்கம், சேர். ராசிக் பரித் ஆகியோரின் கடும் முயற்சிகளின் காரணமாக சுதேச மருத்துவ கல்லூரியில் ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவ பிரிவுகளுடன் யூனானி மருத்துவ முறையும் தாபிக்கப்பட்டது. யூனானி மருத்தும் தொடர்பான விரிவுரையராக இந்தியாவிலிருந்து டாக்டர் எம்.ஏ. அஹமட் மற்றும் டாக்டர் எச்.எம். ஜபர் ஆகியோர் அழைக்கப்பட்டனர். இக்கல்லூரியில் யூனானி மருத்துவத்தை ஆரம்பிப்பதற்கும் அதனை ஒழுங்கமைப்பதற்கும் முக்கிய மூலகர்த்தாவாக இவர்கள் காணப்பட்டனர். இக்கல்லூரியில் யூனானி பிரிவை வைத்திருப்பதற்கு டாக்டர் எச்.எம். ஜபர் மற்றும் அவருடன் அப்போதய சுதேச மருத்துவ உறுப்பினர் சேர் ராசிக் பரித் ஆகியோர் கடுமையாக உழைத்தனர். யூனானி பிரிவின் பிரதான விரிவுரையாளராக டாக்டர். எச்.எம். ஜபர் பணியாற்றினார். டாக்டர். எம்.எச்.எம். ஹபில், டாக்டர் எம்.ஏ.எம். ஜலால்டீன் மற்றும் டாக்டர் எம்.ஐ. வில்லியம் ஆகியோர் யூனானி பிரிவின் தலைவர்களாக பதவி வகித்தனர். இக்காலப் பகுதியில் யூனானி பிரிவை விருத்தி செய்வதற்காக இவர்கள் அனைவரும் கடுமையாக உழைத்தனர்.

### 1.0.3 நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு



## 1.1 கட்டளைச்சட்டம்

உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகமானது, 1979 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## 1.2 முகாமைத்துவ சபை

| பெயர் | பதவிப் பெயர் |
|---|---|
| **தவிசாளர்** | |
| சிரேஷ்ட பேராசி. (Ms.) பீ.ஏ. பரணகம | பணிப்பாளர், உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் |
| **அங்கத்தவர்கள்** | |
| திரு. ஏ.கே. செனவிரத்ன | மேலதிக செயலாளர் (அரச சார்பற்ற உயர் கல்வி) கல்வி அமைச்சு |
| டாக்டர் எம்.டீ.ஜே. அபயகுணவர்தன | ஆணையாளர். ஆயுர்வேத திணைக்களம் |
| Ms. ஜீ.சி. கருணாரத்ன | மேலதிக செயலாளர் (நிருவாகம்), சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சு |
| டாக்டர் (Ms.) எஸ். கலுதொட | பதில் பணிப்பாளர்/ பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம் |
| டாக்டர் (Ms.) எஸ். கும்புரெகெதர | பணிப்பாளர்/ ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கொழும்பு 08 |
| பேராசி. வீ. திஸ்சாநாயக்க | பீடாதிபதி, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| டாக்டர் (Ms.) எஸ்.பீ. மொல்லிகொட | பிரிவுத் தலைவர், ஆயுர்வேத பிரிவு, IIM |
| பேராசி. எம்.எஸ்.எம். ஷிபா | பிரிவுத் தலைவர், யூனானி பிரிவு, IIM |
| பேராசி. எம்.சி. வீரசிங்ஹ | சமூக மருத்துவ திணைக்களம், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| டாக்டர் கே. சிறிதேவா | உயிர் இரசானவியல் திணைக்களம், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| டாக்டர் எஸ். செனவிரத்ன | சத்திரசிகிச்சை திணைக்களம், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| டாக்டர் எம்.எச். நிமல் கருணசிறி | ஆயுர்வேத மருத்துவ சபையின் அங்கத்தவர் |
| பேராசி. எச்.ஏ.எஸ். ஆரியவன்ச | ப.மா.ஆ. நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |

| | |
|---|---|
| திரு. எம்.டீ.டீ. பீரிஸ் | ப.மா.ஆ. நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| டாக்டர் எச். தர்மவிஜய | ப.மா.ஆ. நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| பேராசி. (Ms.) எஸ்.எஸ்.பி.டீ.பீ. சொய்சா | ப.மா.ஆ. நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| டாக்டர் பி.எம். ரிஷாத் | ப.மா.ஆ. நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| டாக்டர் எஸ்.எம்.எச். சேனபண்டா | ப.மா.ஆ. நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| டாக்டர் டீ. சேனசேக்கர | ப.மா.ஆ. நியமிக்கப்பட்ட அங்கத்தவர் |
| பேராசி. கபில செனவிரத்ன | இரசானவியல் திணைக்களம், களனிப் பல்கலைக்கழகம் |
| திரு. ஆர்.எம்.எஸ்.பீ.எஸ். பண்டார | பணிப்பாளர், வெளியக வளங்கள் திணைக்களம், நிதி அமைச்சு |
| **அழைப்பின் பேரில்** | |
| திரு. ரீ.பீ. லியனாரச்சி | பிரதி நிதியாளர், IIM |
| **பதில் செயலாளர்** | |
| Ms. ஈ.எச்.எம். ரணசிங்ஹ | உதவி பதிவாளர், IIM |

## 1.3 நிறுவகத்தின் பணிப்பாளர்

சிரேஷ்ட பேராசிரியர் பிரியானி அசோக்கா பரணகம அவர்கள், கொழும்பு பல்கலைக்கழக, உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகத்தினது பணிப்பாளராக, 2021 பெப்பிரவரி 10-ஆம் திகதி தனது இரண்டாவது பதவிக் காலத்துக்கான கடமைகளை பொறுப்பேற்றார். இவர், 1986-ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் சார் கௌரவப் பட்டத்தைப் பெற்றார். இவர், 1990-இல் உதவி விரிவுரையாளராக களனி பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டதுடன், CISIR-இற்கு பதிலாக அமைக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்குச் சென்று சேதன இரசாயனவியல் சார் தத்துவ முதுமாணி (M.Phil) பட்டத்தைப் பெற்றுக்கொண்டதுடன், 1991-இல் இதற்கான இவரது ஆய்வுக் கருத்திட்டம், GC-MS-ஐப் பயன்படுத்தி இலங்கையின் அத்தியாவசிய எண்ணெய்களின் பகுப்பாய்வு என்பதாகும். இவர், 1994-இல் ஐக்கிய இராச்சியத்தினது கிளஸ்கோவ் பல்கலைக்கழகத்தில் உயிரியல் சேதன இரசாயனவியல் பிரிவில் தனது கலாநிதி (PhD) பட்டத்தை பெற்றுக்கொண்டதுடன், "வெட்டுக்கிளிகளின் (Schistocerca Gregoria) குறிப்பிட்ட திசுக்களில் Azadirachtin சார் விளைவுகள் பற்றிய ஓர் ஆய்வு" எனும் ஆராய்ச்சி கருத்திட்டத்தை பூர்த்திசெய்தார். களனிப் பல்கலைக்கழக, பேராசிரியராக 2003 இலும், அதன் பின்பு 2012 இல் சிரேஷ்ட பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டதுடன், 2012 இரசாயவியலின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர், 2009 முதல் 2012 வரை களனி பல்கலைக்கழக இரசாயனவியல் திணைக்களத்தின் தலைவராக பணியாற்றினார். மேலும், 2016 யூன் முதல் 2017 அக்டோபர் வரை

இரசாயன விஞ்ஞானங்கள் கல்லூரி மற்றும் இலங்கை இரசாயனவியல் நிறுவகத்தின் முன்னோடியான சிலோன் இரசாயன சங்கம் ஆகியவற்றின் பீடாதிபதியாக பணியாற்றியதுடன், 2019/2020 கவுன்சில் வருடத்திற்கான சிலோன் இரசாயன சங்கத்தின் தலைவராக இருந்தார். இவர், சிலோன் இரசாயன நிறுவகம், பட்டய இரசாயனவியலாளர்கள் (Chartered Chemist (CChem), றோயல் இரசாயனவியல் சங்கம் (Royal Society of Chemistry) ஆகியவற்றின் தோழமை அங்கத்தவராவார். 1962 இன் இற்றைப்படுத்தப்பட்ட கூகுள் புலமையாளர் மேற்கோள்களுடன் அவரது H சுட்டி 20 ஆக உள்ளது. இவர், பொதுநலவாய நாடுகள் இரசாயனவியல் சங்கத்தினது (Federation of Commonwealth Chemistry) நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவராவார். இவர், IUPAC தோழமை நிகழ்ச்சித்திட்டத்தின் தோழமை உறுப்பினரும், IUPAC-இன் 2022 – 2023 தவணைக்கான சேதன மற்றும் உயிர் இரசாயனவியல் பிரிவின் இணை அங்கத்தவரும் ஆவார். இவர், 2019 முதல் சிலோன் இரசாயனவியல் நிறுவகத்தின் கீழ் மகளிர் இரசாயனவியலாளர் குழுவை (Women Chemists Committee) ஆரம்பித்ததுடன், அவர் இற்றைவரை WCC-இன் தலைவராகவும் பணியாற்றுகின்றார். இவர், சுதேச மருத்துவ அமைச்சினது ஆயுர்வே திணைக்களத்தின் சூத்திரங்கள் குழுவின் தவிசாளரும் ஆவார். இவர், ஆயுர்வேத மருத்துவ கவுன்சிலின் உப தவிசாளர் என்பதுடன், ஆயுர்வேத கல்வி மற்றும் வைத்தியசாலை குழுவின் அங்கத்தவருமாவார். இவர், UGC- மூலம் சுதேச மருத்துவத்தின் பாட தரநிலை அறிக்கையை தயாரிப்பது சம்பந்தமான தலைவராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

உலக விஞ்ஞான அகடமி (World Academy of Science) (TWAS) மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட விஞ்ஞானத்தினுள் தொழிலை வடிவமைப்பது பற்றிய மகாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 2016-இல் இவர் பங்குபற்றினார். மேலும் இவருக்கு,

- 2015-இல் இரசாயன விஞ்ஞானங்கள் சம்பந்தமான சிறந்த ஆய்வுக்காக டாக்டர் சி.எல். த சில்வா தங்கப்பதக்கம்,
- 2008-இல் இவரது ஆராய்ச்சிப் பணிசார் அடைவுகளுக்காக பேராசி. எம்.யூ.எஸ். சுல்தான்பாவா தங்கப்பத்தகம்,
- 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சனாபதி விருதுகள்,
- இலங்கை தடயவியல் மருத்துவர்களது கல்லூரியின் வருடாந்த ஆராய்ச்சி சிம்போசியத்தில் வெள்ளிப்பதக்கம் – 2012 பெப்பிரவரி, 25
- 2015 – 2016 இல் விஞ்ஞான பீடத்தில் மிகக் கூடிய தொகை வெளிவாரி ஆராய்ச்சி மானிய நிதியளிப்பு சார்பான உபவேந்தர் விருது,
- சிறந்த பங்களிப்புக்கான Yeoman சேவை விருதுகள – சிலோன் இரசாயனவியல் நிறுவகம் – 2017,
- இலங்கை, தேசிய விஞ்ஞான பவுண்டேஷன் மூலம் SUSRED விருது – 2017,
- சூசிகைபடுத்திய பருவ சஞ்சிகைகளில் பிரசுரங்களுக்காக செனட் விருதுகள்; 2019 – இல் இரண்டு செனட் விருதுகள், 2020 – இல் மூன்று செனட் விருதுகள் மற்றும் 2021 – இல் ஐந்து செனட் விருதுகள்,

- 2021 – இல் விஞ்ஞான பீடத்தில் மிகச் சிறந்த சிரேஷ்ட ஆய்வாளருக்கான உபவேந்தர் சிறப்பு விருது இவருக்கு வழங்கப்பட்டது.

இவர், IFS, சுவீடன் மற்றும் TWAS இத்தாலி மூலமாக பல சர்வதேச ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் NRC, NSF, CARP ஆகியன மூலம் தேசிய ஆராய்ச்சி மானியங்கள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சினது இந்து – ஸ்ரீலங்கா (Indo-Sri Lanka) ஒத்துழைப்பு ஆராய்ச்சி மானியம், சிலோன் இரசாயனவியல் நிறுவகம் மற்றும் களனிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து ஆராய்ச்சி மானியங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர், சூசிகைபடுத்திய பருவ சஞ்சிகைகளில் ஆய்வுப் பத்திரங்கள் 62-இற்கும் மேற்பட பிரசுரித்துள்ளதுடன், புத்தகங்கள்/ புத்தக அத்தியாயங்கள் 11 எழுதியுள்ளார் அல்லது திருத்தி அமைத்துள்ளதுடன், தொடர்பாடல் உரைகள் 150-இற்கும் மேற்பட பிரசுரித்துள்ளார். இவர், இயற்கை உற்பத்திகளின் தனிமைப்படுத்தலும் இயல்பாய்வும், மசாலாக்கள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய்களின் பகுப்பாய்வு, சுதேச மருத்துவம் சார் பெறுமதி சேர்ப்பு சார்பாக உயிரியல் பூச்சிகளின் வளர்ச்சி வரை வரிசைப்படுத்திய இரசாயனவியலின் பல் வேறுபட்ட பிரிவுகள் சம்பந்தமான கலாநிதி (PhDs), தத்துவமாணி (MPhils) மற்றும் முதுமாணி (M.Scs) சார் 25-இற்கும் அதிகமான பட்டமேற்படிப்பு மாணவர்களை சிறப்பாக மேற்பார்வை செய்துள்ளதுடன், தற்போது 4 பட்டமேற்படிப்பு மாணவர்களை மேற்பார்வை செய்கின்றார். இவரது ஆய்வுசார் ஆர்வமாக இருப்பது தாவரங்கள் மற்றும் எண்டோலிசெனிக் பங்கசுக்களிலிருந்து உயிரியல் தொழிற்பாடுசார் இயற்கை உற்பத்திகளின் தனிமைப்படுத்தல் மற்றும் இயல்பாய்வு, உயிரியல் பூச்சிக்கொல்லிகளின் விருத்தி, இயற்கை உற்பத்திகள் மற்றும் சுதேச மருத்துவம் சார் பெறுமதி சேர்ப்பு ஆகியனவாகும். இவர், சேதன இரசாயனவியல், இயற்கை உற்பத்தி இரசாயனவியல், பல்லினவட்டமான மூலக்கூறுகள், பிரயோக சேதன இரசாயனவியல் மற்றும் சேதன, உயிர் இரசாயனவியல் சார் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய ஒளிக்கதிர்சார் முறைமைகளை கற்பிப்பதில் ஈடுபட்டுள்ளார்.

## 1.4 கல்விசார் குழுக்கள்

### 1.4 .1 ஆயுர்வேத திணைக்களம் சார் குழு

உண்ணாட்டு மருத்துவம் சார்ந்த சகல கிளைகள் சம்பந்தப்பட்ட கற்கைப் பாடநெறிகள், பயிற்சியளித்தல் நிகழ்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளைச் செய்யும் பொறுப்பு ஆயுர்வேத திணைக்களம் சார் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 15 (1) பிரிவுக்கு ஏற்ப 2020 ஆண்டில் உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது துறைசார் குழு பின்வருமாறு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

ஆயுர்வேத திணைக்களக் குழுவின் தவிசாளர்

தலைவர்/ ஆயுர்வேத கற்கை திணைக்களம்த்தின்

- வைத்தியர் கே.சி. பெரேரா (2020.01.01 முதல் 2021.09.16 வரை)
- வைத்தியர் எஸ்.பீ. மொல்லிகொட (2021.09.17 முதல்)

சகல நிரந்தர விரிவுரையாளர்களையும் ஆயுர்வேத மருத்துவம் சார்பாக கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ள வெளிவாரி அங்கத்தவர்கள் மூவரையும் ஆயுர்வேத திணைக்களம் சார் குழு கொண்டமைந்துள்ளது.

### 1.4.2 யூனானி திணைக்களம் சார் குழு

BUMS சம்பந்தப்பட்ட கற்கைப் பாடநெறிகள், பயிற்சியளித்தல் நிகழ்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளைச் செய்யும் பொறுப்பு யூனானி திணைக்களம் சார் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 15 (1) பிரிவுக்கு ஏற்ப 2020 ஆண்டில் உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது துறைசார் குழு பின்வருமாறு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

- பேராசி. எம்.எஸ்.எம். ஷிபா

சகல நிரந்தர விரிவுரையாளர்களையும் யூனானி சார்பாக கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ள வெளிவாரி அங்கத்தவர்கள் மூவரையும் யூனானி திணைக்களம் சார் குழு கொண்டமைந்துள்ளது.

## 02. கற்கைசார் திணைக்களங்கள், அலகுகள் மற்றும் நிலையங்கள்

### 2.1 ஆயுர்வேதம் சார் கற்கைத் திணைக்களத்தின் கீழுள்ள அலகுகள்

ஆயுர்வேதம் சார் கற்கைத் திணைக்களம் பின்வரும் பெயரில் எட்டு (08) அலகுகளை உள்ளடக்கியுள்ளது.

1. மௌலிக சித்தாந்த (Maulika Siddhantha)
2. திரவ்யகுண விஞ்ஞான (Dravyaguna Vignana)
3. ஸ்வஸ்தவ்ரித்த (Swasthavritta)
4. காய சிகித்சா (Kaya Chikitsa)
5. தேஷிய சிகித்சா (Deshiya Chikitsa)
6. பிரசூதிதந்தர கௌமாரபுத்ய (Prasutitantra Kaumarabhritya)
7. சல்ய சாலகய (Shalya Shalakya)

8. இணைந்த விஞ்ஞானங்கள் (Allied Science) (ஆயுர்வேத மற்றும் யூனானி ஆகிய இரு திணைக்களங்களுக்கும் பொதுவானது).

## 2.2 யூனானி கற்கை சார் திணைக்களத்தின் கீழுள்ள அலகுகள்

யூனானி கற்கை சார் திணைக்களம் பின்வரும் பெயரில் எட்டு (08) அலகுகளை உள்ளடக்கியுள்ளது.

1. குல்லியத் (Kulliyat)
2. இல்முல் அத்விபா (Ilmul Advia)
3. மொஹலிஜாத் (Moalejat)
4. அம்ராஸ் ஈ நிஸ்வான் (Amraz e Nizwan)
5. இல்முல் ஜரஹத் (Ilmul Jarahat)
6. தஹப்புஸி வா சமாஜி திப் (Tahaffuzi va Samaji Tibb)
7. தேஷிய இலாஜ் (Deshiya Ilaj)
8. இணைந்த விஞ்ஞானங்கள் (Allied Science) (ஆயுர்வேத மற்றும் யூனானி ஆகிய இரு திணைக்களங்களுக்கும் பொதுவானது).

## 2.3 தகவல் தொழில்நுட்ப (IT) அலகு

ஜப்பான் அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட நன்கொடையின் கீழ் ஓடியோ விஷுவல் அலகொன்றாக 1986-இல் தகவல் தொழில்நுட்ப அலகு தாபிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன், தகவல் தொழில்நுட்ப சேவைகள் மேம்படுத்தப்பட்டு, தகவல் தொழில்நுட்ப அலகு என்பதாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தகவல் தொழில்நுட்பப் பிரிவானது. உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்திற்கு பிரதானமாக தகவல் தொழில்நுட்ப வளங்களை வழங்குபவராக திகழ்கிறது.

தகவல் தொழில்நுட்ப பிரிவானது, பிரதான கேட்போர்கூடம், சிறிய விரிவுரை மண்டபம் மற்றும் மாணவர்கள் அதேபோல் விரிவுரையாளர்கள் ஆகியோர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சேவை வழங்கும் 30 கணினி இயந்திரங்களைக் கொண்ட இரண்டு கணினி ஆய்வகங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. ஒரு கணினி ஆய்வகம் மாணவர்களது சுயாதீன பயன்பாடுகளுக்காக மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய கணினி ஆய்வகம் பிரதானமாக விரிவுரையாளர்களது மேற்பார்வையின் கீழ் பயிற்சிக்காக பயன்படுத்தப்படுகிறது.

தகவல் தொழில்நுட்ப பிரிவானது ஆயுர்வேத மற்றும் யூனானி மாணவ, மாணவிகள் சார்பாக தகவல் தொழில்நுட்ப விரிவுரைகளை நடாத்துகிறது. அது, IIM–இற்காக இணைய வசதிகள், புகைப்பட வசதிகள், ஒலி வசதிகள், IIM கள ஈமெயில் உருவாக்குதல் வசதி, கணினி பழுதுபார்த்தல் மற்றும் IIM–இற்கான மென்பொருள் பொருத்துதல் வசதிகள் என்பவற்றை வழங்குகிறது. IIM–இன் இணையதளம் மற்றும் கற்றல்

முகாமைத்துவ முறைமை (LMS) கையாளுவதற்கான பிரதான அதிகாரமுள்ள தரப்பாக இருப்பது தகவல் தொழில்நுட்ப பிரிவாகும். இது, வேண்டுகோளுக்கிணங்க பிரதான இணையதளத்தை இற்றைப்படுத்துதல் அல்லது IIM–இற்காக புதிய இணைய-தளங்களை உருவாக்குதல் என்பவற்றை மேற்கொள்கிறது. தகவல் தொழில்நுட்ப (IT) பிரிவானது, கல்விசார் பணியாளர் அங்கத்தவரொருவரால் தலைமை தாங்கப்படுவதுடன், இரண்டு கணினி போதனாசிரிகள், உதவி வலையமைப்பு முகாமையாளர், பயிலுநர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஆய்வக உதவியாளர் ஒருவர் ஆகியோரை இது கொண்டமைந்துள்ளது.

## 2.4 நூலகம்

உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தின் நூலகம், 1929 ஆம் ஆண்டில் ஆயுர்வேதக் கல்லூரி தாபிக்கப்படுவதுடன் உருவாக்கப்பட்டது. நிறுவகத்தின் கல்விசார் மற்றும் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவசியமான வளங்களைப் பெற்றுக்கொடுத்து, நிறுவகத்தின் கல்விசார் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வது நூலகத்தின் பிரதான குறிக்கோளாகும். நூல்கள் சேகரிப்பில் முக்கியமாக ஆயுர்வேத மற்றும் யூனானி மருத்துவத்துறைகள் உள்ளடங்குகின்றன. தற்போதய பருவ சஞ்சிகைகள் சேகரிப்பில் 03 ஈ-ஜெர்னல்கள் மற்றும் 03 அச்சுப்பதிப்புசார் சஞ்சிகைகள் உள்ளடங்கியுள்ளன.

- நூலகத்திற்கு ரூ. 546,811.00 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் ரூ. 3,138,777.20 பெறுமதியான பருவ சஞ்சிகைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன.
- நன்கொடையாக ரூ. 36355.00 பெறுமதியான 86 புத்தகங்கள் அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளப்பட்டன.

## 2.5. ஆங்கில மொழி கற்பித்தல்

சுதேச மருத்துவத் துறை சார்பாக சர்வதேச அங்கீகாரத்தை இனங்காணுவதோடு, நிறுவகத்தை மிகச் சிறந்த ஆளுமை மற்றும் திறன்கள் கொண்டமைந்த பட்டதாரிகளை உருவாக்குவதற்காக அதனது பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதனடிப்படையில், தேவையான மொழித் தொடர்பால் மற்றும் தொழில்சார் திறன்கள் என்பன IIM-இல் அதன் முதன்மையானவற்றில் ஒன்றாகும். அதனது மாணவர்களை உருவாக்கும் முயற்சியின் போது, IIM எந்தவொரு தனிநபர்களுக்கும் மிக முக்கியமான ஏனைய மென் திறன்களுடன் தேவையான மொழித் திறன்களை ஊட்டுவதற்காக கொழும்பு பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் திணைக்களத்துடன் (DELT) கைகோர்த்து பணியாற்றுகிறது.

ஆரம்பத்தில், மாணவர்களை திசைப்படுத்துவதற்கு முன்னரான காலத்தில் துரித ஆங்கில நிகழ்ச்சித்திட்டமொன்று வழங்கப்பட்டது. 2011-இல் பாடத்திட்ட திருத்தத்தின் பின்பு, ஆயுர்வேத மற்றும் யூனானி மருத்துவ மாணவ, மாணவர்களுக்காக இரண்டு அடிப்படை பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன – ஆங்கிலம் 1 மற்றும்

ஆங்கிலம் 2: பட்டத்தை பெற்றுக்கொள்வதற்காக சகல பட்டதாரி மாணவ, மாணவிகளும் இதனை பூர்த்திசெய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் சார் மதிப்பீடானது தொடர்ச்சியான மதிப்பாய்வுகள், வாய்மூலம் மற்றும் தவணை இறுதிப் பரீட்சை ஆகியன ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. இப் பாடநெறிகள் இரண்டும் மாணவர்களது ஆங்கிலம் சார் நான்கு பிரதான திறன்கள் – பேசுதல், கேட்டல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

### 2.6 நிருவாகப் பிரிவுகள் மற்றும் தலைவர்கள்

நிறுவகத்தில் ஏழு நிருவாகப் பிரிவுகள் காணப்படுவதுடன், அவை பின்வரும் நிருவாக உத்தியோகத்தர்களின் கீழ் தொழிற்படுகின்றன.

| இல. | பிரிவுகள் | நிருவாகப் பிரிவுகள் மற்றும் நூலகம் |
|---|---|---|
| 1 | பணிப்பாளரின் அலுவலகம் | சிரேஷ்ட பேராசி. பிரியானி ஏ. பரணகம / பணிப்பாளர் |
| 2 | நிருவாகம் மற்றும் மூலதன வேலைகள் | திருமதி எச்.ஆர். ஷிரோமி கோமிஸ் / உதவி பதிவாளர் |
| 3 | மாணவர் நலன்புரி | திருமதி எச்.ஆர். ஷிரோமி கோமிஸ் / உதவி பதிவாளர் |
| 4 | தாபனம் | திருமதி ஈ.எச்.எம். ரணசிங்ஹ / உதவி பதிவாளர் |
| 5 | கல்விசார் மற்றும் பிரசுரித்தல் | திரு. லலித் வர்ணசூரிய / பிரதி பதிவாளர் (2021.11.14 வரை)<br>திருமதி அனோமா ரத்நாயக்க / சிரேஷ்ட உதவி பதிவாளர் (2021.11.15 முதல்) |
| 6 | பரீட்சைகள் | |
| 7 | நிதி | திரு. ரீ.பீ. லியனாஆரச்சி / பிரதி நிதியாளர் |
| 8 | நூலகம் | டாக்டர் (திருமதி) சி.கே. கமகே / சிரேஷ்ட உதவி நூலகர் (2021.06.22 வரை)<br>திருமதி ரி.எம். அயோமி / சிரேஷ்ட உதவி நூலகர் (2021.06.23 முதல்) |

## 03. உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

### 3.1 கூட்டங்கள் மற்றும் குழுக்கள்

| இல. | கூட்டங்கள் | ஆண்டின் போது நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண். |
|---|---|---|
| 01 | முகாமைத்துவ சபை | 14 |
| 02 | நிதிக் குழு | 07 |
| 03 | பரீட்சை உப குழு | 05 |
| 04 | திட்டமிடல் மற்றும் நிர்மானித்தல் குழு | 06 |

| | | |
|---|---|---|
| 05 | நிருவாகத் தலைவர்களின் குழு | 05 |
| 06 | பிரிவு சார் குழு/ ஆயுர்வேத | 12 |
| 07 | பிரிவு சார் குழு/ யூனானி | 13 |
| 08 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 04 |
| 09 | நூலக குழு | 04 |
| 10 | நெறிமுறை சார் மீளாய்வு குழு | 11 |
| 11 | உள்ளக தர உத்தரவாத குழு | 08 |
| 12 | வலைதள குழு | 01 |
| 13 | திணைக்கள பெறுவனவுகள் குழு - பிரதான | 05 |
| 14 | திணைக்கள பெறுவனவுகள் குழு – சிறிய | 82 |
| 15 | விடுதி குழு | 02 |
| 16 | சிற்றுண்டிச்சாலை குழு | 01 |

## 3.2 நியமனங்கள் மற்றும் பணியாளர்கள் பற்றிய தகவல்கள்

### 3.2.1 ஊழியர்கள் வகைப்படுத்தல்

| **சேவை வகை** | **சம்பள குறியீடு** | **அங்கீகரிக் -கப்பட்ட பதவியணி** | **உள்ளபடி ஊழியர்** |
|---|---|---|---|
| **ஆரம்ப மட்டம்** | | | |
| ஆரம்ப மட்டம் – தேர்ச்சி அற்ற | **PL- 1** | 47 | 20 |
| ஆரம்ப மட்டம் – பகுதி தேர்ச்சி பெற்ற | **PL- 2** | 14 | 9 |
| ஆரம்ப மட்டம் – தேர்ச்சி பெற்ற | **PL- 3** | 13 | 16 |
| **இரண்டாம் மட்டம்** | | | |
| முகாமை. உதவியாளர் – தொழில்நுட்பம் சாரா | **U- MN 1** | 62 | 51 |
| முகாமை. உதவியாளர் – தொழில்நுட்பம் சார் | **U-MT 1** | 14 | 7 |
| இணைந்த அலுவலர்கள் – பிரிவு 2 | **U-MN 2** | 1 | 1 |
| இணைந்த அலுவலர்கள் – பிரிவு 1 | **U-MN 3** | 4 | 4 |
| பதவிநிலை உதவி அலுவலர்/ அதியுயர் மற்றும் சிரேஷ்ட பதவிநிலை உதவி அலுவலர்கள் | **U-MN 4** | - | 10 |
| **மூன்றாம் மட்டம்** | | | |
| கல்விசார் துணை – பிரிவு 2 | **U-AS 1** | 1 | 1 |
| கனிஷ்ட நிறைவேற்றுநர்/ முகாமையாளர் | **U-EX 1** | 4 | 3 |
| கல்விசார் துணை – பிரிவு 1 | **U-AS 2** | 5 | 4 |

| | | | |
|---|---|---|---|
| **சிரேஷ்ட மட்டம்** | | | |
| மருத்துவ உத்தியோகத்தர்கள் | **U-MO 1** | - | - |
| பிரதன மருத்துவ உத்தியோகத்தர் | **U-MO 2** | - | - |
| இடை நிலை நிறைவேற்றுநர்கள் | **U-EX 2** | 4 | 2 |
| இடை நிலை நிறைவேற்றுநர்கள் | **U-EX 2 (a)** | | 1 |
| சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள் | **U-EX 3** | - | - |
| விரிவுரையாளர்கள் | **U-AC 3** | 93 | 83 |
| இணைந்த பேராசிரியர்கள் | **U-AC 4** | | |
| பேராசிரியர்கள்/ சிரேஷ்ட பேராசிரியர்கள் | **U-AC 5** | | 6+(1 பணிப்பாளர்/ IIM) |

### 3.2.2 மொத்த புதிய நியமனங்கள்

` கல்விசார் - 13

நிருவாகம் - -

கல்வி சாரா - 22

கல்விசார் துணை - 02

### 3.2.3. பதவியணி விபரம்

| பதவியணி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| கல்விசார் பணியாளர்கள் | 93 | 89 | 04 |
| நிருவாகப் பணியாளர்கள் | 07 | 07 | - |
| கல்விசார் துணை பணியாளர்கள் | 06 | 05 | 01 |
| கல்விசாரா பணியாளர்கள் | 155 | 118 | 37 |
| **மொத்தம்** | **261** | **219** | **42** |

### 3.2.4 பணியாளர் அங்கத்தவர்கள் எண்ணிக்கை

(i) நிரந்தர கல்விசார் மற்றும் கல்விசார் துணை பணியாளர்கள் - 94

(ii) நிரந்தர நிருவாகப் பணியாளர்கள் - 07

(iii) நிரந்தர கல்விசாரா பணியாளர்கள் - 118




உரு. 1: சகல ஊழியர்கள் வகைப்படுத்தல்

### 3.2.5 பணியாளர் சார் மாற்றங்கள்

| வகை | கல்விசார் | நிருவாக | கல்விசாரா | கல்விசார் துணை |
|---|---|---|---|---|
| நியமனங்கள் | 13 | - | 22 | 02 |
| நிரந்தரமாக்கல் | 02 | - | 02 | 02 |
| பதவி உயர்வுகள் | 07 | - | 08 | - |
| இடமாற்றல்கள் | - | - | - | - |
| சேவை நீடிப்புக்கள் | - | - | - | - |
| ஓய்வு பெறுதல்கள் | 02 | - | 01 | - |
| பதவி விலகல்கள் | - | - | 03 | - |

### 3.2.6. நிருவாக பணியாளர்கள் பற்றிய விபரம்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி |
|---|---|---|
| பதிவாளர் | 01 | 01 |
| பிரதி பதிவாளர் | 01 | 01 |
| பிரதி நிதியாளர்/ சிரேஷ்ட உதவி நிதியாளர் | 02 | 03 |
| உதவி நிதியாளர் | 01 | 00 |

| | | |
|---|---|---|
| உதவிப் பதிவாளர் | 02 | 02 |
| மொத்தம் | 07 | 07 |

### 3.2.7 நிறுவகத்தின் கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரம்

| **வகை** | **ஆயுர்வேத பிரிவு** | **யூனானி பிரிவு** | **மொத்தம்** |
|---|---|---|---|
| சிரேஷ்ட பேராசிரியர் | 0 | 0 | **0** |
| பேராசிரியர் | 4 | 4 | **8** |
| சிரேஷ்ட விரிவுரையாளர் | 36 | 19 | **55** |
| விரிவுரையாளர் | 2 | 2 | **4** |
| விரிவுரையாளர் (நியமனம் உறுதிசெய்யப்படாத) | 2 | 0 | **2** |
| விரிவுரையாளர் (தகுதிகாண்) | 13 | 7 | **20** |




உரு 2: கல்விசார்பணியாளர் அங்கத்தவர்களது வகைப்படுத்தல்

### 3.2.8 கல்விசாரா பணியாளர்கள் பற்றிய விபரம்

| **பிரிவு / கிளை** | **சிரேஷ்ட பணியாளர்** | **இரண்டாவது மட்டம்** | **ஆரம்ப மட்டம்** | **மூன்றாவது மட்டம்** |
|---|---|---|---|---|
| பணிப்பாளரின் அலுவலகம் | 01 | 02 | 01 | - |
| நிர்வாக மற்றும் மூலதன வேலைகள் பிரிவு | - | 10 | 08 | 01 |
| தாபனப் பிரிவு | - | 04 | 01 | 01 |
| கல்விசார் மற்றும் பிரசுரங்கள் பிரிவு | - | 04 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| பரீட்சை பிரிவு | - | 06 | 02 | 02 |
| மாணவர் நலன்புரி பிரிவு | - | 05 | 01 | - |
| பராமரிப்பு பிரிவு | - | 04 | 09 | - |
| நிதிப் பிரிவு | 01 | 09 | 01 | 02 |
| நூலகம் | - | 05 | 04 | - |
| யூனானி சார் கற்கைத் திணைக்களம் | - | 02 | 01 | - |
| இல்முல் அத்வியா சார் கற்கை அலகு - யூனானி | - | 02 | 01 | - |
| தேஷிய இலாஜ் சார் கற்கை அலகு – யூனானி | - | 01 | - | - |
| மொஹலிஜாத் சார் கற்கை அலகு – யூனானி | - | 01 | - | - |
| ஆயுர்வேத சார் கற்கைத் திணைக்களம் | - | 03 | - | - |
| தேஷிய சிகித்சா சார் கற்கை அலகு – ஆயுர்வேத | - | 01 | 01 | - |
| ஸ்வஸ்தவுரித்த சார் கற்கை அலகு – ஆயுர்வேத | - | 01 | 01 | - |
| திரவ்யகுண விஞ்ஞான சார் கற்கை அலகு – ஆயுர்வேத | - | 03 | 05 | - |
| மௌலிக சித்தாந்த சார் கற்கை அலகு – ஆயுர்வேத | - | 01 | 01 | - |
| காய சிகித்சா சார் கற்கை அலகு – ஆயுர்வேத | - | 01 | 01 | - |
| சல்ய சாலகய சார் கற்கை அலகு – ஆயுர்வேத | - | 01 | 01 | - |
| பிரசூதிதந்தர சார் கற்கை அலகு – ஆயுர்வேத | - | 01 | 01 | - |
| இணைந்த விஞ்ஞானங்கள் சார் கற்கை அலகு – ஆயுர்வேத | - | 02 | 03 | - |
| துணை பணியாளர்கள் | - | 02 | - | 01 |
| தகவல் தொழில்நுட்ப நிலையம் | - | 01 | 02 | 03 |
| ஆங்கில அலகு | - | 01 | - | - |
| **மொத்தம்** | **02** | **73** | **45** | **10** |

கல்விசாராாத பணியாளர்கள், கற்கைசார் உதவி பணியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம்சாரா, பயிற்றப்பட்ட, அரைவாசி பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தரங்கள் என நிருவாகப் பிரிவுகள், கல்விசார் திணைக்களங்கள் மற்றும் அலகுகள் ஆகியவற்றின் கீழ் மொத்தமாக 130 பேர் சேவையாற்றுகின்றனர். நிறுவகத்தின் நாளாந்த செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காக அவர்களினால் வழங்கப்படும் பங்களிப்பானது மிக முக்கியமானதாகும்.

### 3.3 கல்வி சாரா பணியாளர்களுக்கான திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| **பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் / செயலமர்வுகள்** | **பங்குபற்றியோர் எண்.** |
|---|---|
| தொழில்சார் நடத்தையும் சீர்ப்படுத்தலும் | 130 |
| IT – மைக்ரோசொப்ஃட் எக்செல் எட்வான்ஸ் 2013 (Microsoft Excel Advance 2013) | 05 |
| IT – இணையமும் மின்னஞ்சலும் (Internet & Email) | 14 |

### 3.4. விசேட செயற்பாடுகள்

### 3.4.1. 7-வது சர்வதேச மாநாடு

கொழும்பு பல்கலைக்கழக, உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது (IIM), 92-வது தொடக்க நாளை கொண்டாடும் வகையில், ஆயுர்வேத, யூனானி, சித்த மற்றும் பாரம்பரிய மருத்துவம் சம்பந்தமான 7-வது சர்வதேச மாநாடு (ICAUST 2021), "வளர்ந்து வரும் சுகாதார சிக்கல்களுக்கான சுதேச அறிவு" எனும் கருப்பொருளின் கீழ், IIM–இன் ஆரம்ப நாளுடன் தொடர்புபட்டதாக 2021 யூன், 10 மற்றும் 11 ஆம் திகதிகளில், இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலுடன் மெய்நிகர் தளத்தில் ஒழுங்குசெய்து நடாத்தப்பட்டது.



**IIM-இன் பணிப்பாளர் அவர்கள் மாநாட்டில் உரையாற்றுகின்றார்**

### 3.4.2 முதலுதவி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

சல்ய சாலக்ய மற்றும் இல்முல் ஜர்ஹாத் கற்கை அலகுகளின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட முதலுதவி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், 2021 மார்ச் 20 மற்றும் 21-ஆம் திகதிகளில் புனித ஜோன்ஸ் பிணியூர்தி சங்கத்தின் (St. John’s Ambulance) நிபுணத்துவ அறிவுடன் நிறுவகத்தில் நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டம் சார்பாக 142 பேர் பங்குபற்றினர்.



**வளவாளர்கள் மற்றும் பங்குபற்றியோர்**
**சிலர்**

### 3.4.3. திசைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம்

2018/2019 கல்வியாண்டு புதிய அனுமதி பெற்றவர்களுக்கான திசைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2021 மே, 31-ஆம் திகதி மெய்நிகராக நடாத்தப்பட்டது.



IIM, பணிப்பாளர் அவர்கள்
மாணவர்களுக்கு (ஒன்லைன்)
உரையாற்றுகின்றார்

### 3.4.4. கோவிட்-19 பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொது சுகாதார பரிசோதகர், 2021 பெப்பிரவரி, 20-ஆம் கோவிட்-19 நோயை தடுப்பது சம்பந்தமாக IIM–இன் பணியாளர்கள் சகலரும் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.



நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியோர்

### 3.4.5. பாராட்டுதல் வைபவம்

IIM–இன் நலன்புரி சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பாராட்டு விழா, 2021 ஏப்பிரல், 05-ஆம் திகதி, IIM–இனது ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்ற ஊழியர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக நடாத்தப்பட்டது.



நினைவுப் பரிசில் வழங்குதல்

### 3.4.6. யூனானி தின சர்வதேச வெபினர்

உலக யூனானி தினம் என்பது, ஒவ்வொரு வருடமும் பெப்பிரவரி 11-ஆம் திகதி கொண்டாடப்படும் உலகலாவிய நிகழ்வொன்று என்பதுடன், அது நோய் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் தத்துவத்தின் ஊடாக யூனானி மருத்துவ முறைமை மூலம் சுகாதார பராமரிப்பை வழங்குவதற்காக விழிப்புணர்வூட்டலை பரப்பச் செய்வதற்கானதாகும். யூனானி திணைக்களத்தின் பிரதான சிகிச்சையக கற்கை அலகுகள் எனும் வகையில், அம்ராஸ் ஈ நிஸ்ஸான், கபாலித் வா அட்பால் ஆகியன 2021 பெப்பிரவரி, 11-ஆம் திகதி உலக யூனானி தினத்தை கொண்டாடும் முகமாக சர்வதேச வெபினர் ஒன்றை வெற்றிகரமாக நடாத்தியது.

### 3.5 ஆய்வு, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் பிரசுரங்கள்

| விடயம் | பிரசுரிக்கப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|
| ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 113 | 98 |
| பிரித்தெடுப்புக்களில் எண்ணிக்கை | 57 | 8 |
| கண்டுபிடிப்புக்களின் எண்ணிக்கை | 5 | - |
| சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 51 | 1 |
| புத்தகங்களின் எண்ணிக்கை | 15 | - |
| ஆக்கங்களின் எண்ணிக்கை | 60 | - |
| ஏனையவை | 10 | - |
| **மொத்தம்** | **311** | **107** |




உரு 3: பிரசுரிக்கப்பட்ட ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் பிரசுரங்கள் ஆகியவற்றின் வீதம




**உரு 4: சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் பிரசுரங்கள் ஆகியவற்றின் வீதம்**

### 3.6 கல்விசார் பணியாளர்கள் பங்குபற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| **நிகழ்ச்சித்திட்டத்தின் வகை** | **பங்குபற்றிய கல்விசார் பணியாளரின் எண்.** |
|---|---|
| கருத்தரங்குகள் / செயலமர்வுகள் | 37 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 33 |

### 3.7 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்விசார் பணியாளர்களின் பங்களிப்புக்கள்

## 3.7.1 ஆயுர்வேத சார் கல்வித் திணைக்களம்

**3.7.1.1** அடிப்படைக் கோட்பாடுகள்

- **கல்விசார் பணியாளர் அங்கத்தவர்களின் பெயர்:** ***டாக்டர் எம். டபிள்யூ. எஸ்.ஜே. குமாரி (சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II)***

(i) தலைவர், IIM–இன் ஆசிரியர்களின் சங்கம்

(ii) ஓலைச் சுவடுகளை மீள ஒழுங்குபடுத்தல் குழுவின் அங்கத்தவர் மற்றும் IIM நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடு கையெழுத்துப் பிரதிகளை பாதுகாக்கும் குழுவின் அங்கத்தவர்.

(iii) சுகாதார அமைச்சினது தேசிய சுகாதார ஆராய்ச்சி கவுன்சில் அங்கத்தவர்.

(iv) செயலாளர்/ உப தலைவர்/ கவுன்சில் அங்கத்தவர், இலங்கை சனத்தொகை சங்கம்.

(v) குழு அங்கத்தவர் – ஆயுர்வேத கோவிட் சிகிச்சைசார் இடைநிலை நிலையங்களில் கோவிட் – 19 (COVID 19) நெறிமுறைகள் தயாரித்தல், சிகிச்சையளித்தல் மற்றும் முகாமை செய்தல்.

(vi) அங்கத்தவர் - வழிநடத்தல் கூட்டம், இணை தலைவர் – ஆரம்ப வைபவம், வரவேற்றல் மற்றும் பதிவுசெய்தல் குழு, விஞ்ஞானபூர்வ அமர்வுகள் சார் ஏற்பாட்டுக் குழு அங்கத்தவர், பிரித்தெடுப்பு, ஆராய்ச்சி பத்திர மீளாய்வு மற்றும் பதிப்பாசிரியர் குழு அங்கத்தவர், ஆயுர்வேத, யூனானி, சித்த மற்றும் பாரம்பரிய மருத்துவம் சார் 7-வது சர்வதேச மாநாடு (ICAUST 2021)

(vii) பிரித்தெடுப்பு மீளாய்வாளர், 4-வது ஆராய்ச்சி சிம்போசியம் (RuFARS - 2021), இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், ருகுணை பல்கலைக்கழகம்.

(viii) தவிசாளர், IIM-இன் சுதேச மருத்துவ கல்வி அலகு தாபித்தல்.

(ix) தவிசாளர், ஆயுர்வேத ஊடாக கோவிட்-19 இற்கு பின்னர் முகாமைசெய்தல் பற்றிய கருத்திட்ட முன்மொழிவை தயாரிப்பதற்கான குழு.

(x) பதிப்பாசிரியர் சபை அங்கத்தவர், இலங்கை சனத்தொகை கற்கைகள் சார் ஜெர்னல், தொகுதி 22 – இலக்கம் 1 மற்றும் 2

(xi) ஆலோசனை சபை அங்கத்தவர்/ ஒத்திசைவு மீளாய்வாளர், இலங்கை சுதேச மருத்துவம் சார் பருவ சஞ்சிகை.

(xii) பிரதம பதிப்பாசிரியர், ஆயுர்வேத சமீக்ஷாவ ஜெர்னல் 2020/2021

(xiii) அங்கத்தவர், ERC, உப குழு அங்கத்தவர்

(1) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபைக்கான சிகிச்சையக பரிசோதனை (Clinical Trial) பதிவேட்டை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பங்களை தயாரிப்பதற்கான

(2) பட்டதாரி மாணவர் ஆராய்ச்சி முன்மொழிவு மதிப்பீடு செய்வதற்கான நெறிமுறைகள் மீளாய்வு குழு

(xiv) குழாம் உறுப்பினர், *கோவிட்-19 மீதான இயற்கை உற்பத்திகள் பற்றிய குழாம் கலந்துரையாடல்,* வெபினர்: இலங்கையின் உயிர் இரசாயனவியலாளர்களின் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட, இலங்கையினது உயர் இரசாயனவியல் கல்லூரியின் உயிர் இரசாயனவியலாளர்-களின் 3-வது மகாநாடு.

### 3.7.1.2 இணைந்த விஞ்ஞானங்கள்

- **கல்விசார் பணியாளர் அங்கத்தவர்களின் பெயர்: *டாக்டர் (Ms.) எம்.ஆர்.எம். விக்கிரமசிங்ஹ (சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I)***

| 25.03.2021 | R46236 | 51031 | ஷாலினி ஸ்ரீ ரங்கநாதன் | 673 | - |
| 25.03.2021 | R46236 | 51071 | சிலிங்கோ இன்ஷுரன்ஸ் PLC | 831 | - |
| 23.11.2021 | R46462 | 108764 | தபால் மா அதிபர் நாயகம் - பெஸ்ட் சிட்டி | 30,000 | - |
| 23.11.2021 | R46481 | 108237 | ரமன்டி என்டர்பிரைசஸ் | 43,661 | - |
| 23.11.2021 | R46481 | 108245 | லயன்செம் (பிரை.) லிமி. | 6,156 | - |
| 23.11.2021 | R46481 | 108238 | ஏபிசி இலக்ரிகல்ஸ் | 25,463 | - |
| 23.11.2021 | R46481 | 108259 | ஜே.எச்.சி. லியனகே | 2,000 | - |
| 23.11.2021 | R46481 | 108280 | டபிள்யூ.ஏ.கே. விஜயதாச | 870 | - |
| 23.11.2021 | R46481 | 108217 | ஏம்.எம். இந்திரலதா | 6,318 | - |
| 23.11.2021 | R46482 | 108260 | கே.எம்.என். குமாரசிங்ஹ | 2,000 | - |
| 23.11.2021 | R46482 | 108261 | எச்.ஏ.எஸ். ஆரியவன்ஷ | 2,000 | - |
| 23.11.2021 | R46482 | 108281 | ஆர்.எம். தர்மதாச | 1,998 | - |
| 23.11.2021 | R46482 | 108098 | பீ.கே. கொஹொலங்கெத்தர | 3,967 | - |
| 23.11.2021 | R46482 | 107971 | கே.ஏ.டபிள்யூ. விஜேநாயக்க | 4,833 | - |
| 23.11.2021 | R46482 | 107840 | ஏ.கே.எஸ். வீரசேக்கர | 12 | - |
| 23.11.2021 | R46482 | 107841 | ஏ.ஆர். ரிதானா | 94 | - |
| 23.11.2021 | R46483 | 108311 | யூ.கே.எம். நதீர் | 29,257 | - |
| 23.11.2021 | R46483 | 108309 | கே.சி. பெரேரா | 5,200 | - |
| 23.11.2021 | R46483 | 108306 | ஆர்.எம். தர்மதாச | 5,362 | - |
| 23.11.2021 | R46483 | 108301 | நலின் குணசிங்ஹ | 1,128 | - |
| 23.11.2021 | R46483 | 108307 | எல்.ஏ.ஜே. த சில்வா | 1,316 | - |
| 23.11.2021 | R46483 | 107842 | கே.டீ. லொக்குகமகே | 97 | - |
| 14.12.2021 | R46685 | 591289 | பந்துல ஸ்ரீபத்தன | 6,000 | - |
| 31.12.2021 | R46780 | 108390 | எஸ்.எல். நிதஹஸ் சேவக்க சங்கமய | 3,650 | - |
| | | | | **300,694** | **214,434** |

**பக்கம் 24**

அட்டவணை F

**செலுத்தவேண்டிய பரீட்சை கட்டணங்கள்**

| பற்றுசீட் . இல. | விபரம் | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|---|
| REC 36135 | Dr M H M ஹபீல் மற்றும் ஏனையோரும் | - | 8,893 |
| REC 36136 | Dr M D K A N மதுரங்க மற்றும் ஏனையோரும் | - | 4,980 |
| REC 41187 | Dr. W.M.M.S.K. குலதுங்க மற்றும் ஏனையோர் | - | 7,400 |
| REC 43336 | Dr. P.A.S.N த சில்வா | - | 9,525 |
| REC 44466 | M S பல்ளி | 1,800 | 1,800 |
| REC 44469 | W.K.B.D.S. பெர்னாந்து | 600 | 600 |
| REC 44475 | M S பல்ளி | 600 | 600 |
| REC 45068 | M S பல்ளி | 600 | 600 |
| REC 46038 | Dr. நஜீப் | - | 1,700 |
| | | **3,600** | **36,098** |

**அட்டவணை G**

**ஆராய்ச்சி நிதியம்**

| | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|
| DAFP/2006/07 வைத்தியர் எதிரிவீர | 40,153 | 64,267 |
| DAFP/2010/12 - வைத்தி. அனோமா சமரவிக்ரம | - | 29,295 |
| DAFP/2010/03 - வைத்தியர் ஜீவனி | - | 15,333 |
| விசேட நிதியம் - வைத்தியர் அனோமா ஜயசிறி | - | 300 |
| UGC/Phd - வைத்தியர் எம்.எஸ். பல்ளி | - | 412 |
| அமைச்சு மானியம் | - | 248,595 |
| திறன் விருத்தி | - | 54,875 |
| NSF மானியம் | - | 11,838 |
| ஆராய்ச்சி நிதி - வைத்தியர் ஹபுஆரச்சி | - | 10,598 |
| பீ.ஏ.எஸ்.என். த சில்வா - ப.மா.ஆ. மானியம் | 1,941,800 | 290,305 |
| Dr N பஹமியா - ப.மா.ஆ. மானியம் | 834,475 | - |
| Dr M S M ஷிபா - ப.மா.ஆ. மானியம் | 47,267 | - |
| அவுஸ்திரேலியா மானியம் - எடலைட்ட ஸ்ரீலங்கா | 143,655 | - |
| | **3,007,350** | **725,818** |

**அட்டவணை H**

**நிறுத்திவைத்தல்**

| உ.சீ.இல./<br>நாளே.இல. | விபரம் | 2021<br>ரூ. | 2020<br>ரூ. |
|---|---|---|---|
| 57 | அசோக்க வெல்டிங் | - | 22,940 |
| 68 | ஆசிறி கன்ஸ்ரக்ஷன்ஸ் | 22,935 | 22,935 |
| 69 | ஏசிசு லங்கா | 219,795 | 219,795 |
| J3996 | எனெக்ஸ் ஏஜன்சீஸ் | 3,290 | 3,290 |
| J3996 | எனெக்ஸ் ஏஜன்சீஸ் | 26,008 | 26,008 |
| J4464 | டெக்னோமெடீஸ் இன்டநெஷனல் | - | 92,500 |
| J4926 | கிராஃப் லங்கா இன்ஜினியரிங் | - | 403,650 |
| J5305 | நெஸ்டன் (பிரை.) லிமி. | 116,450 | - |
| J5305 | ஜோன் கீல்ஸ் ஒபீஸ் | 1,400,625 | - |
| J5305 | நெஷனல் இன்ஜினியரிங் ரிசேர்ச் & டெவலப்மென்ட் | 259,358 | - |
| J5305 | லங்கா ஏ என் குளோபல் மெர்சன்ட் | 1,159,000 | - |
| J5305 | டெலிசோனிக் லங்கா | 40,492 | |
| | | **3,247,953** | **791,118** |

**அட்டவணை I**

**பரிசில்களும் நன்கொடைகளும்**

| உ.சீ.இல./ நாளே.இல. | விபரம் | 2021 ரூ. | 2020 ரூ. |
|---|---|---|---|
| நூலக புத்தகங்கள் | | 444,159 | 444,159 |
| அலுவலக உபகரணம் | | 112,400 | 112,400 |
| Lash உபகரணம் | | 6,999,800 | 6,999,800 |
| வகுப்பு அறை | | 266,969 | 266,969 |
| காசு | | 500 | 500 |
| பசுமை இல்லம் (1999) | | 840,000 | 840,000 |
| 2000 நூலக புத்தகங்கள் | | 4,846 | 4,846 |
| 2001 நூலக புத்தகங்கள் | | 23,762 | 23,762 |
| 2004 நூலக புத்தகங்கள் | | 88,399 | 88,399 |
| 2005 நூலக புத்தகங்கள் | | 80,085 | 80,085 |
| 2006 நூலக புத்தகங்கள் | | 1,840 | 1,840 |
| 2007 நூலக புத்தகங்கள் | | 12,520 | 12,520 |
| 2007 அலுவலக உபகரணம் | | 735,784 | 735,784 |
| 2007 வாகனம் | | 146,500 | 146,500 |
| 2008 நூலக புத்தகங்கள் | | 16,255 | 16,255 |
| 2010 Irque உபகரணம் | | 5,387,230 | 5,387,230 |
| 2010 புத்தகங்கள் | | 529,134 | 529,134 |
| 2012 HECT கருத்திட்டம் | | 1,818,698 | 1,818,698 |
| 2013- புத்தகங்கள் | | 5,048 | 5,048 |
| 2014 கருத்திட்டம் – கணினி, அச்சிடல் இயந்திரம் | | 6,111 | 6,111 |
| 2014 HECT கருத்திட்டம் - அலுவலக உபகரணம் | | 37,318 | 37,318 |
| 2014- புத்தகங்கள் | | 1,324 | 1,324 |
| 2016- புத்தகங்கள் | | - | 4,193 |
| 2017- புத்தகங்கள் | | 10,248 | 29,682 |
| புத்தகங்கள் - 2018 | | 9,904 | 14,856 |
| புத்தகங்கள் - 2019 | | 4,909 | 6,976 |
| கொழும்பு பல்கலைக்கழகம் | | 122,667 | 181,547 |
| புத்தகங்கள் - 2020 | | 4,899 | 6,339 |
| புத்தகங்கள் - 2021 | | 31,619 | - |
| | | **17,742,928** | **17,802,275** |

**அட்டவணை J**

**அறக்கட்டளை நிதியம்**

| விபரம் | 2021 ரூ. | 2020 ரூ. |
|---|---|---|
| பாணகல | - | 10,050 |
| ஜயந்த எதிரிசிங்ஹ | 54,367 | 40,952 |
| திரட்டு நிதியம் | 684,040 | 636,467 |
| ஏ.பீ.ஜீ. அமரசிங்ஹ | 500,000 | 500,000 |
| ஈ.ஆர்.எச்.எஸ். எதிரிவீர | 500,000 | - |
| | **1,738,407** | **1,187,469** |

அட்டவணை - K

| தேறிய இலாபம் மற்றும் நட்டம் (பொது ஒதுக்கம்) | | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| J4864 | கணக்கீட்டு திருத்தம் | - | -261,899 |
| J4931 | பிரயாணத்திற்கான முற்பணம் | - | -79,000 |
| J4938 | மாற்றல் | - | 5,589 |
| J4945 | அட்டுறு செலவினங்கள் | - | 247,531 |
| J4950 | வறிதான காசோலை | - | 135,915 |
| J4951 | மூலதனம் | - | -15,308,882 |
| J4956 | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | - | 14,019,731 |
| J4957 | தேய்மானத்திற்கான ஏற்பாடு | - | 21 |
| C04 | ருவண் டிரேட் சென்டர் | -59,300 | - |
| J5190 | செலுத்தவேண்டிய பரீட்சைக் கட்டணம் | 30,798 | - |
| J5306 | வறிதான காசோலை | 42,797 | - |
| J5322 | அட்டுறு பாடநெறிகள் | 230,618 | - |
| J5367 | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 21,838,767 | - |
| J5371 | அட்டுறு செலவினங்கள் | 1,214,441 | - |
| J5373 | Credit மீதிகள் | 477,254 | - |
| J5368 | மோட்டார் கார் நிதியம் | -1,327,500 | - |
| J5374 | மாற்றல் க/கு | -4,928 | - |
| J5375 | அறக்கட்டளை நிதியம் | -13,415 | - |
| J5375 | திரண்ட புலமைப்பரிசில் நிதியம் | -47,573 | - |
| | | **22,381,959** | **-1,240,994** |

| உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் , கொழும்பு பல்கலைக்கழகம் | | | |
|---|---|---|---|
| 2021.12.31-ஆம் திகதியில் உள்ளவாறான பரீட்சைமீதி | | | |
| | விபரம் | வரவு | செலவு |
| | | ரூ. | ரூ. |
| 111001 | மூலதனம் | | 410,397,893.88 |
| 111002 | செலவிடப்படாத மூலதன மானியம் | | 15,760,592.77 |
| 111006 | அவுஸ்திரேலியா மானியம் - எடலைட் புலமைப்பரிசில் | | 143,655.00 |
| 113002 | DAFP/2006/07 வைத்தியர் எதிரிவீர | | 40,153.43 |
| 122001 | பொது ஒதுக்கம் | 263,891,164.21 | |
| 131003 | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 3,198,744,374.63 |
| 134002 | பரிசில்களும் நன்கொடைகளும் | | 17,742,927.61 |
| 1333 | பணிப்பாளரின் நிதியம் | | 517,659.44 |
| 1334 | பிரிவுசார் அபிவிருத்தி நிதியம் - திரவ்யகுண | | 217,310.00 |
| 1334/1 | பிரிவுசார் அபிவிருத்தி நிதியம் – பட்டமேற்படிப்பு | | 92,562.19 |
| 1334/2 | பிரிவுசார் அபிவிருத்தி நிதியம் - ஸ்வஸ்தவுவுரித்த | | 60,160.00 |
| 1335 | திணைக்கள அபிவிருத்தி நிதியம் | | 68,750.45 |
| 1336 | நிறுவக அபிவிருத்தி செலவினத்தலைப்பு | | 75,407.18 |
| 16101006 | ஏனைய வைப்புக்கள் (எரிபொருள் வைப்பு) | 97,500.00 | |
| 16101008 | பாதுகாப்பு வைப்புக்கள் | | 30,000.00 |
| 16101011 | சிற்றுண்டிசாலைக்கான வைப்பு | | 50,000.00 |
| 16101013 | தேய்மான ஏற்பாடுகள் | | 80,174,569.09 |
| 16101016 | வறிதான காசோலைகள் | | 300,693.51 |
| 16101019 | செலுத்தப்படாத பரீட்சை கட்டணம் | | 3,600.00 |
| 161011020 | பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | 239,226,883.46 |
| 163002 | அட்டுறுச் செலவுகள் | | 7,394,389.08 |
| 163003 | செலுத்தவேண்டிய முத்திரை தீர்வை | | 2,375.00 |
| 163004 | அட்டுறுச் செலவினம் – மூலதனம் | | 300.00 |
| 17101004 | ஷாந்தி லங்கா | | 250,000.00 |
| 17101006 | UGC இற்கு செலுத்தவேண்டியது | | 357.00 |
| 17101008 | பணியாளர் நலன்புரி நிதியம் | | 11,356.00 |
| 17101009 | செலுத்தவேண்டிய Payee | | 47,067.22 |
| 17101018 | UGC/Dr என். பஹமியா | | 834,474.62 |
| 17101019 | UGC/Dr எம்.எஸ்.எம். ஷிபா | | 47,267.82 |
| 17101026 | UGC/Dr பீ.ஏ.எஸ்.என். சில்வா | | 1,941,800.00 |
| 17101028 | அட்டுறு மசாஜ் சிசிச்சை பாடநெறி 2019 | | 346,123.88 |
| 17101030 | முன் பெறுவனவு - விடுதிக் கட்டணம் | | 100.00 |
| 17101035 | டெப் (Tab) கணினி | | 10,393.00 |
| 17101036 | முன் பெறுவனவு மசாஜ் சிகிச்சை பாடநெறி 2022 | | 9,000.00 |
| 4217 | கொய்ன்ஸ் ரவுண்ட் அப் | | 18,100.61 |
| 2101004 | காணி | 3,005,950,000.34 | |
| 2101038 | மூலதனம் – கட்டடம் -103 | 400,870,502.02 | |
| 2101041 | மூலதன மோட்டார் வாகனக் க/கு | 32,299,999.79 | |
| 2101068 | மூலதனம் – மாணவர் கேந்திர கற்றல் | 479,999.52 | |
| 2102007 | மூலதனம்- கணினி மற்றும் அச்சிடல்பொறி | 24,244,419.41 | |
| 2102008 | மூலதனம் - விளையாட்டு உபகரணங்கள் - 3 | 2,861,225.00 | |
| 2103002 | மூலதனம்-அலுவல., ஆய்வுகூ, கற்பித். உபகரண | 39,596,520.96 | |
| 2103004 | மூலதனம்-தளபாடங்களும் ஏனையவைகளும் | 30,755,851.98 | |
| 2104001 | மூலதனம் – புத்தகங்களும் பருவ சஞ்சிகைகளும் | 45,406,114.29 | |
| 2104002 | மூலதனம் - முடிவுறாத வேலை | 16,931,299.69 | |
| 2109001 | மூலதனம் – பொறியும் இயந்திரங்களும் | 19,890,616.61 | |
| 2109002 | முதலீட்டுக் க/கு – எதிரிசிங்ஹ | 55,367.07 | |
| 2109008 | முதலீட்டுக் க/கு – 5,000,000/- | 9,033,630.72 | |
| 2109009 | திரண்ட புலமைப்பரிசல் நிதியம் | 704,040.29 | |
| 2109010 | முதலீட்டுக் க/கு - பேராசி. ஏ.பீ.ஜீ. அமரசிங்ஹ | 527,500.00 | |
| 2109011 | நிலையான வைப்பு | 5,801,738.69 | |
| 2109012 | முதலீட்டுக் க/கு - ஈ.ஆர்.எச்.எஸ். எதிரிவீர | 500,000.00 | |
| 221002 | அறக்கட்டளை நிதியம் – ஜயந்த எதிரிசிங்ஹ | | 54,366.96 |
| 221006 | அறக்கட்டளை நிதியம் – திரண்ட நிதியம் | | 684,040.32 |

| | | | |
|---|---|---|---|
| 221007 | அறக்கட்டளை நிதியம் - Dr ஏ.பீ.ஜீ. அமரசிங்ஹ | | 500,000.00 |
| 221008 | அறக்கட்டளை நிதியம் - ஈ.ஆர்.எச்.எஸ். எதிரிவீர | | 500,000.00 |
| 221009 | மோட்டார் வாகன நிதியம் | | 1,327,500.00 |
| 225001 | நிறுத்திவைக்கப்பட்ட பணம் – மூலதனம் | | 3,247,953.10 |
| 2301001 | களஞ்சிய முற்பணக் க/கு | 2,300,718.60 | |
| 2302013 | கீழைத்தேய மருத்துவ நிதியம் | | 100,000.00 |
| 2303001 | இடர் கடன்கள் | 19,756,042.00 | |
| 2303002 | பணியாளர் கடன்கள் | 80,750.00 | |
| 2303003 | வாகனக் கடன்கள் | 940,866.00 | |
| 2303004 | கணினி கடன்கள் | 481,500.00 | |
| 2303009 | பண்டிகை முற்பணம் | 57,250.00 | |
| 2305001 | நானாவித முற்பணங்கள் | 80,800.00 | |
| 2310001 | மக்கள் வங்கி, பொரல்ல - 078100192268358 | 12,029,599.61 | |
| 2310002 | மக்கள் வங்கி, பொரல்ல - 07810012268390 | 15,760,592.77 | |
| 2310003 | மக்கள் வங்கி, பொரல்ல - 07810012268432 | 1,648,965.14 | |
| 2310004 | மக்கள் வங்கி, பொரல்ல - 078100172268458 | 2,027,680.53 | |
| 2310005 | சேமிப்பு க/கு - 078-2-001-7-22683 | 291,405.08 | |
| 2312001 | முற்கொடுப்பனவுகள் | 1,061,997.62 | |
| 2314006/2 | பெறவேண்டிய மாணவ உதவுதொகை - UGC | 3,002,400.00 | |
| 2314006/3 | முதலீடுகளின் மூலம் கிடைக்கவேண்டிய வட்டி | 123,952.00 | |
| 27010 | பெறவேண்டிய நூலக அபராதங்கள் | 7,332.00 | |
| 27013 | பெறவேண்டிய விடுதிக் கட்டணங்கள் | 256,300.00 | |
| 27014 | மேலதிக இரவு வைப்பு முதலீடு | 3,173,113.16 | |
| 301B | அரச மானியம் – மீண்டெழும் | | 588,000,000.00 |
| 302 | முதலீடு மூலம் வட்டி | | 2,352,374.85 |
| 30205 | மாணவ உதவுதொகை பெற்றது - UGC | | 17,956,800.00 |
| 30210 | மோட்டார் கார் நீக்கல் க/கு | | 1,327,500.00 |
| 30312 | கடன் இலதாக்கல் வருமானம் | | 25,478,833.11 |
| 303 | கடன் மூலம் வட்டி | | 511,731.01 |
| 306 | ஆதனங்களிருந்து வாடகை | | 17,500.00 |
| 308C | நானாவித வருமானங்கள் | | 18,200.00 |
| 310010 | பரீட்சைக் கட்டணங்கள் | | 54,250.00 |
| 310011 | விடுதிக் கட்டணங்கள் | | 141,700.00 |
| 310012 | சான்றிதழ் வருமானங்கள் | | 99,305.00 |
| 310013 | பதிவுக் கட்டணங்கள் (பட்டமேற்படிப்பு) | | 1,000.00 |
| 310015 | விலைமனுக் கட்டணங்கள் | | 61,500.00 |
| 310016 | பதிவுக் கட்டணங்கள் (மாணவர்கள்) | | 647,900.50 |
| 339 | ICAUST வருமானம் | | 249,825.04 |
| 318 | வாசிகசாலை அபராதங்கள் | | 8,055.00 |
| 340 | மூலதன செலவு மீண்டெழும் தன்மையிலான | | 2,452,282.47 |
| 346/A | மசாஜ் சிசிச்சை வருமானம் 2019 | | 190,000.00 |
| 348 | ERC குழு | | 26,000.00 |
| 410102 | போக்குவரத்தும் வாழ்க்கைச் செலவுப் படியும் | 52,855.86 | |
| 410103 | வழங்கல்கள் | 5,201,071.18 | |
| 410104 | பராமரிப்புக்கள் | 4,173,302.73 | |
| 4101041 | ஆளுக்குரிய வேதனங்கள் - கல்விசார் | 12,898,656.77 | |
| 4101042 | ஆளுக்குரிய வேதனங்கள் - NA | 44,666,398.83 | |
| 410105 | ஒப்பந்த சேவைகள் | 42,654,047.19 | |
| 410106 | ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 3,324,575.34 | |
| 410112 | வங்கிக் கட்டணங்கள் | 16,200.00 | |
| 410203 | வழங்கல்கள் | 368,166.19 | |
| 410204 | பராமரிப்புக்கள் | 139,000.00 | |
| 4102041 | ஆளுக்குரிய வேதனங்கள் - கல்விசார் | 393,029.61 | |
| 4102042 | ஆளுக்குரிய வேதனங்கள் - NA | 17,192,945.75 | |
| 410205 | ஒப்பந்த சேவைகள் | 810.00 | |
| 410206 | ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 132,112.40 | |
| 410503 | வழங்கல்கள் | 4,165,161.63 | |
| 410504 | பராமரிப்புக்கள் | 711,580.14 | |

| | | | |
|---|---|---|---|
| 4105041 | ஆளுக்குரிய வேதனங்கள் - கல்விசார் | 531,828.36 | |
| 4105042 | ஆளுக்குரிய வேதனங்கள் - NA | 12,713,301.70 | |
| 410505 | ஒப்பந்த சேவைகள் | 1,500.00 | |
| 420902 | போக்குவரத்தும் வாழ்க்கைச் செலவுப் படியும் | 2,000.00 | |
| 420903 | வழங்கல்கள் | 2,136,232.87 | |
| 420904 | பராமரிப்புக்கள் | 47,160.00 | |
| 4209041 | ஆளுக்குரிய வேதனங்கள் - A | 325,647,829.35 | |
| 4209042 | ஆளுக்குரிய வேதனங்கள் - NA | 54,604,901.26 | |
| 420905 | ஒப்பந்த சேவைகள் | 58,014.51 | |
| 420906 | ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 4,924,810.19 | |
| 422310 | மாணவர்களுக்கான நிதி உதவிகள் | 17,956,800.00 | |
| 430103 | வழங்கல்கள் | 402,551.25 | |
| 430104 | பராமரிப்புக்கள் | 4,900.00 | |
| 4301041 | ஆளுக்குரிய வேதனங்கள் - A | 8,586,754.94 | |
| 4301042 | ஆளுக்குரிய வேதனங்கள் - NA | 13,109,235.75 | |
| 430105 | ஒப்பந்த சேவைகள் | 13,500.00 | |
| 430106 | ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 1,208.00 | |
| 440117 | கணக்காய்வு கட்டணங்கள் | 600,000.00 | |
| 450312 | ஏனைய தொழிற்பாட்டு செலவினங்கள் | 26,483,748.35 | |
| 480103 | வழங்கல்கள் | 293,564.14 | |
| 480104 | பராமரிப்புக்கள் | 49,060.00 | |
| 4801042 | ஆளுக்குரிய வேதனங்கள் - NA | 3,023,667.87 | |
| 480105 | ஒப்பந்த சேவைகள் | 28,300.00 | |
| 480106 | ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 120,430.53 | |
| 49001 | தேய்மானக் கணக்கு | 47,317,600.00 | |
| 49009 | மனித மூலதன அபிவிருத்தி | 456,709.47 | |
| 49010 | ஆராய்ச்சி வலுவூட்டுதல் | 1,012,587.00 | |
| 49025 | செலவினங்கள் ICAUST | 199,063.97 | |
| 49029 | புனரமைப்பு செலவினங்கள் | 982,986.00 | |
| 49031 | செலவினங்கள் மசாஜ் சிகிச்சை பாடநெறி | 190,000.00 | |
| | | **4,620,568,914.23** | **4,620,568,914.23** |

**பக்கம் 30**

## உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் - கொழும்பு பல்கலைக்கழகம்

## வரவுச் செலவுத் திட்ட ஏற்பாடுகள் மற்றும் உள்ளபடியான மீண்டெழும் செலவினம் - 2021

| 2020 | குறியீ . இல. | விபரம் | அனுமதித்த வரவு செலவுத் திட்டம் 2021 | உள்ளபடி 2021 | மிகை அல்லது பற்றாக்குறை | காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 (4-5) | 7 |
| 512,257,165 | 1 | ஆளுக்குரிய வேதனங்கள் | 512,000,000 | 508,774,485 | 3,225,515 | தொற்றுநோய் நிலைமை காரணமாக மேலதிக நேர செலவினங்கள் மற்றும் வருகைதரும் விரிவுரையாளர் கட்டணங்கள் குறைவடைந்தமை. |
| 23,025 | 2 | பிரயாணச் செலவு | 488,000 | 54,856 | 433,144 | வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயணங்கள் குறைவடைந்தமை. |
| 10,199,419 | 3 | வழங்கல்களும் நுகர்வுகளும் | 10,325,000 | 12,566,747 | - 2,241,747 | தொற்றுநோய் காரணமாக விலைகள் அதிகரித்தமை, மருத்துவ வழங்கல்களின் அதிகமான கொள்வனவு மற்றும் அதிகமான எரிபொருள் பாவணை. |
| 3,485,740 | 4 | பராமரிப்புக்கள் | 3,700,000 | 5,125,003 | - 1,425,003 | வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் பழுதுபார்ப்புக்களும் சேவைகளும் அதிகரித்தமை. |
| 41,038,689 | 5 | ஒப்பந்த சேவைகள் | 53,800,000 | 42,756,172 | 11,043,828 | மின்சாரம், நீர் மற்றும் தொலைத்தொடர்பாடல் ஆகியவற்றின் பாவணை குறைவடைந்தமை. |
| 9,098,420 | 6 | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 20,230,000 | 8,519,336 | 11,710,664 | பணியாளர் அபிவிருத்தி, மாணவர் நலன்புரி, கேளிக்கை, பரீட்சை செலவுகள் போன்றன குறைவடைந்தமை. |
| **576,102,458** | | **மொத்த மீண்டெழும் செலவு** | **600,543,000** | **577,796,599** | **22,746,401** | |

## உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் - கொழும்பு பல்கலைக்கழகம்

## வரவுச் செலவுத் திட்ட ஏற்பாடுகள் மற்றும் உள்ளபடியான மூலதன செலவினம் - 2021

| 2020 | குறியீ . இல. | விபரம் | அனுமதித்த வரவு செலவுத் திட்டம் 2021 | உள்ளபடி 2021 | மிகை அல்லது பற்றாக்குறை | காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 (4-5) | 7 |
| 2,347,200 | 1 | நிலையான சொத்துக்கள் புனரமைப்பும் மேம்படுத்தலும் | 24,337,538 | 23,749,787 | 587,751 | தாமதமாக பூர்த்தி செய்ததன் காரணமாக சில கொடுப்பனவுகள் 2022 இல் செலுத்தியமை மற்றும் மேலதிக மாணவர் உள்வாங்கல் சார்பாக AHEAD மானியம் பெற்றுக்கொண்டமை. |
| 18,603,437 | 2 | நிலையான சொத்துக்கள் கொள்ளல் | 30,000,000 | 18,374,089 | 11,625,911 | விநியோகம் தாமதித்தமை காரணமாக சில கொடுப்பனவுகள் 2022 இல் செலுத்தியமை மற்றும் மேலதிக மாணவர் உள்வாங்கல் சார்பாக UGC IT மானியம் பெற்றுக்கொண்டமை. |
| 136,498 | 3 | மனித மூலதன அபிவிருத்தி | 1,000,000 | 456,709 | 543,291 | தொற்றுநோய் நிலைமை காரணமாக பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் குறைவாக நடாத்தப்பட்டமை. |
| 802,200 | 4 | ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 2,000,000 | 1,211,651 | 788,349 | வெபினர்கள் அதிகமாக நடத்தப்பட்டதனால் செலவினம் குறைவாக ஏற்பட்டமை. |
| **21,889,335** | | **மொத்த மூலதன செலவு** | **57,337,538** | **43,792,236** | **13,545,302** | |

# உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம்

# கொழும்பு பல்கலைக்கழகம்

## கணக்காய்வு அறிக்கையும் பதில்களும்

## 31-12-2021

## 10. கணக்காய்வு அறிக்கையும் பதில்களும்

தமிழ் மொழிபெயர்ப்பு

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

எனது இலக்கம்: HED/F/1/IIM/2021/FA/04 திகதி: 2022 மே, 31

பணிப்பாளர்,

உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம்

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தின் 2021 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 தகைமையுள்ள அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகத்தின் 2021 திசம்பர் 31-இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றல் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2021 திசம்பர் 31-இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1978 ஆண்டின் 16-ஆம் இலக்கமுடைய பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் 18-வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1979 ஆண்டின் 07-ஆம் இலக்கமுடைய உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது கட்டளைச்சட்டத்தின் 21-ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தின் 108 (1)-வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1)-ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம்

உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் தகைமையுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படையான பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் மூலம் 2021 திசம்பர் 31-இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 தகைமையுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------------------------------------------------------------------------

(அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் 55-வது உறுப்புரையின் பிரகாரம் சொத்தானது மீள்மதிப்பிடப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதியின் அடிப்படையிலான தேய்மானம் மற்றும் சொத்தினது நிதிசார் கிரயத்தின் அடிப்படையிலான தேய்மானம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு மீள்மதிப்பீட்டு மிகையிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட முடியாத போதிலும், அதற்கு முறணாக மீளாய்வு ஆண்டின் போதும் 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போதும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்த முறையே ரூ. 21,838,766/-, ரூ.14,019,732/- மற்றும் ரூ.14,019,732/- ஆகிய தேய்மான பெறுமதிகள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கீட்டிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தன. அதற்கேற்ப, 2021 திசம்பர் 31-ஆம் திகதியில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் பொது ஒதுக்கம் ரூ. 49,878,230 ஆல் முறையே குறைவாகவும் கூடுதலாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வு ஆண்டினுள் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்த ரூ. 57,337,538 ஆன மூலதன மானியம் தொடர்பாக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இனங்காணல் மற்றும் அளவிடுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழில்படு மூலதன மாறுதலுக்கான காசுப் பாய்ச்சலாக சீராக்கல் செய்யப்படவேண்டிய மீதி ரூ. 8,355,852 அதிகரிப்பு நிதி உட்பாய்ச்சலாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது

(ஈ) பிணை உத்தரவாத ஒப்பந்தத்தை மீறியதன் காரணமாக 2021 திசம்பர் 31-ஆம் திகதியன்று அறவிடவேண்டிய ரூ. 8,381,174 கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் சார் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது தகைமையுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்கும் நிமித்தமாக போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன்.

## 1.3 நிறுவகத்தின் 2021 ஆண்டறிக்கையில் உள்ள ஏனைய தகவல்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இக் கணக்காய்வு அறிக்கை திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிறுவகத்தினது 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனாலும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதாக கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்கள் சம்பந்தமாக முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன், நான் அது சம்பந்தமாக எவ்விதமான உறுதிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ தெரிவிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்புபட்டதாக மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கு ஏற்ப அளவுசார்ந்ததாக பொருந்தாது இருகின்றதா என கவனம் செலுத்துவதே எனது பொறுப்பாகும்.

இக் கணக்காய்வு அறிக்கை திகதிக்கு முன்பு நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையிலும் என்னால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களின் அடிப்படையிலும், இந்த ஏனைய தகவல்கள் அளவுசார்ந்ததாக தவறாகக் காட்டப்பட்டுள்ளது என நான் தீர்மானித்தல், என்னால் அவ் விடயம் சார்பாக அறிக்கையிடுவது அவசியமாகும். இது தொடர்பாக நான் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவ மற்றும் நிருவாக தரப்பினரின் பொறுப்புகள்

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களை இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுசார்ந்த பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமையை தீர்மானம் செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன், முகாமைத்துவம் நிறுவகத்தை முடிவுறுத்துவதற்கு கருதுவதாயின் அல்லது ஏனைய மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாயின் தவிர தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமாக பரிசீலிக்கும் பொறுப்பு, நிருவகிக்கும் தரப்பினர்களால் பொறுப்பு ஏற்கப்படுகிறது.

2018 இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பேணிச்செல்லுதல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது நோக்கங்களாக உள்ளன. நியாயமான உறுதிப்படுத்துதல் உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் அளவு சார் பிறழ் கூற்றுக்கள் அற்றவை என உறுதிப்படுத்துதல் ஒன்றாக அமையமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கம் செலுத்துவதன் காரணமாக அளவு சார் பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், அதன் அளவுசார் தன்மை இந் நிதிக் கூற்றுக்களை

அடிப்படையாகக் கொண்டு பயனடைவோர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் சார்பாக சம்பந்தமான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகத்தன்மை என்பவற்றுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் செயலாற்றப்பட்டது. மேலும் என்னால்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவுசார் பிறள் கூற்றுக்களில் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் சார்பாக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. தவறாக குறிப்பிடுவதன் காரணமாக ஏற்படும் அளவுசார் பிறள் கூற்றுக்களால் ஏற்படும் தாக்கம் வலிமை கூடியதாக அமைவது, அவை கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல் போன்றவற்றின் காரணத்தினால ஆகும்.
- உள்ளக நிருவாகத்தின் வினைதிறன் தொடர்பாக அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் நிமித்தமாக உள்ளகக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான விளக்கமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் சார் பொருத்தப்பாடுகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிறுவகமானது தொடர்ந்து இயங்குதல் சம்பந்தமாக அளவுசார் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சார்ந்த அடிப்படையில் கணக்கீட்டு செயற்பாட்டுக்காக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை பயன்படுத்தும் பொருத்தப்பாடுகள் பற்றி தீர்மானிக்கப்பட்டது. அளவுசார் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் பற்றி எனது கணக்காய்வு அறிக்கையானது கவனத்தைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ் வெளிப்படுத்தல்கள் போதியளவாகக் காணப்படாது இருக்குமாயின் எனது

கருத்தை வெளிப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் நிலையானது முடிவுறுத்தவும்படலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதை மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆட்சி செய்யும் தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டல் செய்கின்றேன்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையின் தகைமையுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படையான பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, கணக்காய்வுக்கு அவசியமான சகல தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் தெரிய வருகின்றவாறு முறையான நிதிசார் பதிவேடுகள் நிறுவகத்தினால் பேணிச்செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018-இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிறுவகத்தினது நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப எனது அறிக்கையின் தகைமையுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படையான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள (அ)

அவதானிப்புக்களை தவிர்த்து கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததனால் கீழே குறிப்பிடப்படுவதை விட வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை விடுத்து, நிறுவகத்தின் வழமையான வணிக செயற்பாடுகளுக்கு புறம்பாக ஆட்சி செய்யும் சபையின் உறுப்பினர் எவருக்காவது நிறுவகம் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியற்ற வகையில் தொடர்புபட்டிருத்தல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை தவிர்த்து, ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டங்களுடன் அல்லது நிறுவகத்தின் முகாமைத்துவ சபையினால் விடுக்கப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இணங்காதவாறு செயலாற்றியுள்ளதை குறிப்பிடுதல்.

| சட்ட விதிகள்/ஏற்பாடுகளுடன் தொடர்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) 2018 ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (1) பிரிவு. | உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 திகதியும் பீஈடீ/12 இலக்கமும் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பிரிவு | நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது முன் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் நிறுவகத்தின் மூலம் ரூ. 14,835,370 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

2.2.3 2018 இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிறுவகத்தின் தத்துவங்கள், செயற்பணி மற்றும்

இலக்குகள் என்பவற்றுக்கு இணக்கமின்றிய வகையில் செயலாற்றியிருப்பதை குறிப்பிடுதல்.

2.2.4 2018 இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் காலவரையறைகளுக்குள் ஏற்புடையதான சட்டதிட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கா-மையை குறிப்பிடுதல்.

## 2.3 ஏனைய விடயங்கள்

--------------------------------------------

24 ஆண்டுகளாக மாணவர் விடுதியாக நடாத்திச்செல்லப்படுகின்ற நீர்ப்பாசன திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடத்துடனான காணியை நிறுவகத்திற்காக கையேற்புச் செய்வதற்கு 2019 ஆகஸ்ட் 28 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2021 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் காணியை கைமாற்றல் செய்யும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(கையொப்பம்)
டபிள்யூ.பீ.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

2022.06.15

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தின் 2021 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12-ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.**

தங்களது குறிப்பிட்ட இலக்கமும் 2022.05.31 ஆம் திகதியும் கொண்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியினது அறிக்கைக்கான பதில்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1.2 தகைமையுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து பொது ஒதுக்கத்திற்கான மாற்றல் சம்பந்தமாக கணக்காய்வு மூலம் கடந்த பல வருடங்களாக பல்வேறு வகையில் அறிவிக்கப்-பட்டிருந்ததுடன், கடந்த மூன்று வருடங்களில் இறுதி கணக்காய்வு அறிக்கைகளை கவனத்தில் கொள்ளும்போது அவற்றை பின்வரும் வகையில் சுட்டிக்காட்டலாம்.

2019

ஆண்டில் மீள்மதிப்பீட்டு மிகைகள் பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல் சம்பந்தமாக தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

2020

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 55-வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் 2011 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் சொத்துக்களை ஓய்வுநிலைக்கு ஆக்குதலோ அல்லது நீக்கப்படுலோ இன்றி 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 28,039,464 தொகை மீள்மதிப்பீட்டு மிகையிலிருந்து பொது ஒதுக்கக் கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தது.

2021

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் 55-வது உறுப்புரையின் பிரகாரம் சொத்தினது மீள்மதிப்பீட்டு கொண்டு செல்லும் பெறுமதியின் அடிப்படையிலான தேய்மானம் மற்றும் சொத்தினது நிதிசார் கிரயத்தின் அடிப்படையிலான தேய்மானம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு மீள்மதிப்பீட்டு மிகையிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்படமுடியாத போதிலும், அதற்கு முறணாக மீளாய்வு ஆண்டின் போதும் 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போதும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்த முறையே ரூ. 21,838,766/-, ரூ. 14,019,732/- மற்றும் ரூ. 14,019,732/- ஆகிய தேய்மான பெறுமதிகள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தன. அதற்கேற்ப, 2021 திசம்பர் 31-ஆம் திகதியில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் பொது ஒதுக்கம் ரூ. 49,878,230 ஆல் முறையே குறைவாகவும் கூடுதலாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 55-வது உறுப்புரையில் மீள்மதிப்பீட்டு மிகைகளின் பகுதியொன்றை மாற்றலாம் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் போது கணக்காய்வாளரின் மூலம் மாற்றப்பட

முடியாதென கூறுதல் மற்றும் கடந்த வருடங்களின் போது ஒன்றுக்கொன்று முரணாக விடயங்கள் அறிக்கை செய்யப்பட்டிருத்தல் என்பன காரணமாக எதிர்வரும் காலங்களில் கணக்குகளை தயாரிக்கும் போது எவ்வாறு செயலாற்றுவது என்பது சிக்கலாகவுள்ளது.

அதேபோல், கணக்காய்வில் மூலம் கணக்கிடப்பட்ட சரியான பெறுமதிகள் இன்றி எம்மால் மூன்று வருடங்களாக செய்யப்பட்ட மாற்றல்களின் கூட்டுத் தொகையான ரூ.49,878,230 ஆல் சம்பந்தப்பட்ட ஒதுக்கக் கணக்குகள் குறைவாகவும் அதிகரித்தும் காட்டப்பட்டுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டிருப்பது சரியானதல்ல. ஏனெனில், 2021 ஆண்டில் முழுமையான மீள்மதிப்பீட்டு இலாபம் ரூ. 118,231,741 என்பதுடன், அதில் ரூ. 21,838,766 ஆன பகுதியொன்று மாத்திரம் பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வு ஆண்டினுள் திறைசேரியிலிருந்து பெற்ற ரூ. 35,000,000/- தொகை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெற்ற ரூ. 10,000,000/- தொகை மற்றும் AHEAD கருத்திட்டம் சார்பாக பெற்ற ரூ. 12,337,537.58 தொகை என்பன தனித் தனியாக இனங்காணப்பட்டு பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டு, வருட இறுதியில் J 5336 நாளேட்டுக் குறிப்பின் மூலம் செலவிடப்- படாத மூலதன கணக்குக்கு மாற்றப்பட்டு, ரூ. 57,337,538/- எனக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. அப் பதிவு தவறான முறையில் காட்டப்பட்டிருக்குமாயின், அதற்குச் சமமாக இரு மடங்குப் பெறுமதியிலான வித்தியாசமொன்று காணப்படல் வேண்டும். அத்துடன், கணக்காய்வின் மூலம் வரைவு கணக்காய்வு அறிக்கையில் இப் பெறுமதி ரூ. 9,873,172 என குறிப்பிடப்-பட்டிருந்ததுடன், இறுதி அறிக்கையில் இது ரூ. 8,355,852 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப, தெளிவுபடுத்திட முடியாத ரூ. 1,517,320 வேறுபாடொன்று உள்ளது.

(ஈ) நிறுவகத்தினது விரிவுரையாளர்கள் இருவர் சார்பாக ஒப்பந்தங்களை மீறியது சம்பந்தமாக வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன், கணக்கீட்டு அறிக்கைகள் தயாரிக்கும் திகதி வரையிலும் அவை தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்பதுடன், அறவிடவேண்டிய தொகைகள் சம்பந்தமாகவும் தீர்மானிக்கப்-பட்டிருக்காததன் காரணமாக இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள்/ பிரமாணங்கள் சார்பான தொடர்வு

---------------------------------------------------------------------------------------------------------------------

(அ) நிறுவகத்தினால் உள்ளகக் கணக்காய்வு அலகொன்றை உருவாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அது

சம்பந்தமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் பதவியொன்றை உருவாக்குவதற்காக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அது சம்பந்தமான அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதேவேளை, கொழும்பு நிறுவகத்தை பல்கலைக்கழகத்தின் பீடமொன்றாக ஆக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் உள்ளக கணக்காய்வு அலகொன்றின் அவசியத்தன்மை சார்பான சிக்கலொன்று நிலவுகின்றது.

(ஆ) மீளாய்வு ஆண்டின் போது எவ்வித தொகையும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படாதததுடன், இதற்கு முன்பு வைப்புச் செய்யப்பட்டுள்ள நிலையான வைப்புக்களின் வட்டித் தொகை சுயமாகவே புதிப்பிக்கப்படுதல் மாத்திரமே நிகழ்ந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் முதலீடு செய்வதாயின் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.3 ஏனைய விடயங்கள்

-----------------------------------------------

24 வருடங்களாக மாணவ விடுதியாக பேணிச்செல்லப்படும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான இல. 330 எனும் இலக்கமுடைய காணியை கொழும்பு பல்கலைக்கழக உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் சார்பாக கையேற்புச் செய்வது சம்பந்தமாக 2019.08.28 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என தங்களால் 2022.05.31 ஆம் திகதியுடைய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "நிதி அமைச்சரவர்களது அவதானிப்பைக் கவனத்தில் கொண்டு பேச்சுவார்த்தை நடாத்தி, சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் கூறப்பட்டுள்ள விடயங்களில் கவனம் செலுத்தி, அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்" எனவாகும். எனினும், இந்த இல. 330 விடுதி காணியை கொழும்பு பல்கலைக்கழக உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகம் சார்பாக கைமாற்றம் செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பது, 2021.05.25 ஆந் திகதியும் அமைப/21/0839/308/075 இலக்கமும் கொண்ட கடிதத்தினாலாகும். இந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், அதன் பின்னர் கையேற்புச் செய்வது சார்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. அந் நடவடிக்கைகள் மாதாந்தம் உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தின் முகாமைத்துவ சபைக்கு முன்னேற்ற அறிக்கையொன்றாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கேற்ப, 2019.08.28 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தை தொடர்ந்து, 2020.01.09 ஆம் திகதி மற்றும் 2021.05.25 ஆந் திகதிய அமைச்சரவை

தீர்மானங்கள் கிடைத்துள்ளன. இவ் அமைச்சரவை தீர்மானங்கள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒழுங்குமுறைப்படி கீழே தரப்பட்டுள்ளன.

i. அதற்கு ஏற்ப உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது இல. 330, விடுதிக் காணியை கையேற்புச் செய்வது சம்பந்தமாக 2020.10.26 ஆம் திகதியும் 4/3/10401 இலக்கமும் கொண்ட உதவி காணி ஆணையாளரினால் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் முகாமைத்துவ சபையின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2021.11.09 ஆம் திகதி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குச் சென்று விசாரணை செய்த போது, இல. 330 விடுதி காணியை கையேற்புச் செய்வது சம்பந்தமாக ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றினது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

ii. அத்துடன், 2021.12.10 ஆம் திகதி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சென்று மேற்கொண்ட விசாரணையின் போது, உரிய மேற்படி நடவடிக்கைகளுக்காக ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் அங்கீகாரங்களைப் பெற்றுக்-கொள்வதற்காக பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ஊடாக கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பரிந்துரையை பெற்றுக்கொள்வதற்காக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரால் நீர்ப்பாசனத் திணைக்களத்தினது பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், அக் கடிதத்தின் பிரதியொன்று முகாமைத்துவ சபையினர் அறிந்துகொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

iii. மேலும், உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது இல. 330 விடுதிக் காணியை கையேற்புச் செய்தல் சம்பந்தமாக 2022.01.11 ஆம் திகதி பிரதேச செயலக அலுவலகத்திற்குச் சென்று மேற்கொண்ட விசாரணைகளின் போது, உரிய மேலதிக நடவடிக்கைகளுக்காக ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ஊடாக ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அது பற்றிய நினைவூட்டல் கடிதங்களை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், இக் கையேற்புச் செய்தல் நடவடிக்கைகள் சம்பந்தமாக அவசியமான திட்டம் (Plan) போன்றன நீர்ப்பாசனத் திணைக்களத்தினது கோரிக்கைக்கு ஏற்ப அத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

iv. உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினது இல. 330 விடுதிக் காணியை கையேற்புச் செய்வது சம்பந்தமாக 2022.01.28 ஆம் திகதி கொண்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் படி ஹெக்டேயர் 0.1765 ஆன காணிப் பகுதியை ஆவண விடுவிப்பு பத்திரத்தின் மூலம் உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்திற்கு கைமாற்றல் செய்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், 2022.01.25 ஆந் திகதி கொண்ட திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரால் மாகாண காணி ஆணையாளருக்கு இல.330 விடுதி காணியை உண்ணாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்திற்கு கைமாற்றுவது சம்பந்தமான பரிந்துரைகள் கொண்ட கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக 2022.02.09 ஆம் திகதி மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்ட போது, அன்றைய தினமே, அதாவது 2022.02.09 ஆம் திகதியே குறிப்பிட்ட கடிதம் மேற்படி நிறுவனத்திற்கு கிடைத்துள்ளதாகவும், அது சம்பந்தமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இக் காணியை கைமாற்றல் செய்வது சம்பந்தமாக அந் நிறுவனத்தின் மூலம் விவசாய, காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சினது செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைப்பதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

v. அதன் படி, இக் கடிதம் 2022.02.14 ஆம் திகதியுடன் விவசாய, காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சினது செயலாளருக்கு அனுப்பி வைப்பதற்கு மாகாண காணி ஆணையாளர் (மேல் மாகாணம்) அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 2012 ஆண்டின் 04 ஆம் இலக்க மேல் மாகாண காணி அபிவிருத்திச் சட்டத்தின் 10-வது உறுப்புரையின் படியும் அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி கட்டளைச் சட்டத்தின் 194(ii) (இ) பிரிவின் படி கைமாற்றுவது பொருத்தமானது என அமைப/21/0839/308/075 இலக்கமும் 2021.05.25 திகதியும் கொண்ட அமைச்சரவை முடிவின் பிரகாரம் பரிந்துரை செய்து மாகாண சபையின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான ஆவணங்களையும் அக் கடிதத்துடன் மாகாண காணி ஆணையாளர் (மேல் மாகாணம்) அவர்களால் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

vi. உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகத்தினது இல. 330 விடுதிக் காணியை கையேற்புச் செய்தல் சம்பந்தமாக 2022.03.10 ஆந் திகதி விவசாய, காணி,

நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சுக்கு சென்று மேற்கொண்ட விசாரணையின் போது, காணியை கைமாற்றுதல் செய்வதற்காக 2022.03.09 ஆந் திகதி ஆளுநர் அவர்களது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்கிணங்க, அவசியமான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

vii. உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகத்தினது இல. 330 விடுதி காணியை கையேற்புச் செய்தல் சம்பந்தமாக 2022.05.05 ஆம் திகதி காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்குச் சென்று மேற்கொண்ட விசாரணையின் போது, காணியை கையேற்புச் செய்வதற்காக ஏற்கனவே உரிய பரிந்துரைகள் கொண்ட அறிக்கையொன்றை பரிசீலனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிரேஷ்ட பேராசிரியர் பீ.ஏ. பரணகம,
பணிப்பாளர்,
உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகம்.